மாலைமணி

ஆசிரியர்: டி.எஸ். இளங்கோ

மணி 2 ★ 17-7-60 ★ ஒலி 37

ஓ.எம். சுப்ரமணியன்.

சம்பத் - சிவாஜி சந்திப்பு !

கண்ணதாசன் - கணேசன்

மனக் கசப்பு மறைந்தது !





சென்ற சில தினங்களுக்கு முன்பு பரணி ஸ்டியோவில் நடைபெற்ற கவிஞர் கண்ணதாசனின் பிறந்த தின விழாவில்—நடிகர் திலகம் சிவாஜி கணேசன் கலந்து கொண்டு, அவரே வரவேற்பாளராகவும் இருந்து சிறப்பித்த நிகழ்ச்சி நமக்கெல்லாம் பெரும் மகிழ்ச்சியூட்டும் செய்தி என்றாலும்—நாட்டிலே அது பெரும் பரபரப்பையும் உண்டாக்கி இருக்கிறது! குறிப்பாக அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியையும், அச்சத்தையும் கூட அளித்திருக்கும் என்றே நம்புகிறோம்!

"கவிஞர் கண்ணதாசனுக்கும், நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கும் நீண்ட நாட்களாக இருந்து வந்த பகைமை, மனக் கசப்பு எப்படி மறைந்தது? ஏன் மறைந்தது?" என்று பலர் திகைக்கிறார்கள், ஆச்சரியமும், அதிசயமும் கொள்கிறார்கள் !

நடிகர் திலகம் போராட்டத்தில் கலந்து கொள்வாரா ?

கட்டபொம்மனுக்குச் சொந்தக்காரர்கள் "இது கனவோ" என்று கண்களை கசக்கி கசக்கி திறந்து பார்க்கிறார்கள்! "அதிசயம், அதிசயம்" என்று வியப்படைகிறார்கள்!

"எங்களுக்குத் தான் சொந்தம்—கணேசன் கதர் கட்டி விட்டார், குல்லாய் வைத்து விட்டார்! விபூதி குங்குமமும் நெற்றியிலே வைத்து விட்டார்" என்று கூத்தாடி, கூத்தாடி மகிழ்ந்து கிடந்த அமைச்சர்களுக்கும் பெரும் திகில் ஏற்பட்டு விட்டது! "பிறந்த இடத்திற்கே போய் விட்டானே" என்று சிலர் கவலையும் கொள்ளுகின்றனர் !

கண்ணதாசன் கலையுலகத்தில் இருக்கிறார், சிவாஜியும் கலையுலகத்தில் இருக்கிறார். இருவரும் ஒன்று படுவதில் தவறில்லை என்று சிலர் எண்ணுகின்றனர் !

ஆனால் விழாவிற்கு வந்த சம்பத் அவர்களுக்கு கணேசன் செலுத்திய மரியாதையையும் அன்பையும் காணும் போது பலர் பலவிதமாக எண்ணுகின்றனர் !

திரு. சம்பத் விழாவிற்கு வந்தது முதல், அவர் உணவருந்தும் போது, பேசும் போது தனியாக உட்கார்ந்திருந்த போதும் கணேசன், சம்பத் அருகிலேயே நின்று கொண்டு உபசரித்ததும், ஏதேதோ பேசிக் கொண்டிருந்ததும் பலருக்கு பலத்த சந்தேகத்தை கிளப்பி விட்டிருக்கிறது!

சம்பத் தனித்த அரசியல்வாதி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரும் தலைவர்—அத்தோடு போராட்டக் குழுவின் தலைவருமாவார்! இந்த நிலையில் சம்பத்தோடு, கணேசன் என்ன பேசி இருக்கக்கூடும் என்று பலர் பலவிதமான யூகத்திற்கு இடம் கொடுக்கின்றனர்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை செல்லக் கூடும் என்று பலர் திடமாக நம்புகின்றனர்! அதனால் தான் சம்பத்—சிவாஜி சந்திப்பும் நடைபெற்று இருக்கிறது என்கின்றனர்!

மக்கள் இப்படி எண்ணுவதிலும் தவறில்லை! மொழி அழிந்து, தமிழன் விழி அழிந்து, தமிழ் நாடு உயிரைவிட்டு மாய்ந்து போகும் தருணத்தில் கணேசனைப் போன்ற பெரும் கலைஞர்களெல்லாம் பராமுகமாய் இருப்பது முற்றிலும் சரியல்ல!

(9 ம் பக்கம் பார்க்க)

மாலைமணி!
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 17-7-60 ஒலி 37

அண்ணா இருக்கிறார்- அமைச்சர்களே அஞ்ச வேண்டாம்!

அஸ்சாம் மாநிலத்தில் நடைபெற்று வரும் பெரும் கிளர்ச்சியைக் கண்டு, சென்னை சர்க்கார் பெரும் கலக்கமும், கவலையும் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது!

அஸ்சாம் மாநிலத்து சர்க்காரை விட, சென்னை சர்க்காருக்குத் தான் பெரும் நடுக்கம் ஏற்பட்டிருக்கிறது, பெரும் பீதியும் ஏற்பட்டிருக்கிறது! காரணம் என்ன?

அஸ்சாம் மாநிலம், சென்னைக்கு மிக அருகிலுள்ள மாநிலமல்ல! சென்னைக்கு வட கிழக்கே, நெடுந்தொலைவிலுள்ள மாநிலமாகும்! ஏறத்தாழ ஆயிரத்தி ஐந்நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு மாநிலத்தில் நடைபெறும் கிளர்ச்சியைக் கண்டு இங்குள்ள சர்க்கார் கலக்கமடையக் காரணம் என்ன?

“அஸ்சாம் மொழி தான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும், அஸ்சாம் மொழி பேசும் மக்கள் தான் அஸ்சாம் மாநிலத்தின் வளப்பத்தை, அஸ்சாம் மாநிலத்தின் செழிப்பை அனுபவிக்க வேண்டும்! வேறு யாரும், வேறு எந்த மொழி பேசுபவர்களும் அஸ்சாமின் செல்வத்தை அனுபவிக்கக் கூடாது” என்று பெரும் கிளர்ச்சியில் அந்த மாநிலத்து மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்!

அஸ்சாம் மாநிலத்தில் பெரும் ஆதிக்கம் செலுத்தி வரும் வங்காளத்து மக்களை, துரத்தி துரத்தி, அஸ்சாம மக்கள் அடித்து வருகின்றனர்! ஏறத்தாழ ஆயிரம் வங்காளக் குடும்பங்களுக்கு மேல் வெளியேறி விட்டனர்! வங்கத்து மக்கள் நடுங்குகிறார்கள், அஞ்சுகிறார்கள், உயிர் இருக்குமா என்று பயப்படுகிறார்கள்! தினம், தினம் அந்த மாநிலத்தை விட்டு வங்கத்து மக்கள் வெளியேறி கொண்டே இருக்கின்றனர்!

அஸ்சாம் அறப்போர் வீரர்கள் ஆரம்பத்தில் அமைதியான முறையில் தான் போராட்டத்தை நடத்தி வந்தனர்! ஆட்சியாளர்கள் அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு பெரும் கொந்தளிப்பை உண்டாக்கி விட்டனர்!

போலீசார், அறப்போர் வீரர்களின் மண்டைகளைப் பிளந்து, ரத்தத்தை ருசி பார்த்து மகிழ்ந்தனர்! துப்பாக்கியால் சுட்டனர்! பலரை வீழ்த்திப் படுகாயப்படுத்தினர்!

அறப்போர் வீரர்கள் இந்த அடக்கு முறைகளைக் கண்டு சிறிதும் அஞ்சவில்லை! வேங்கையைப்போல் வெகுண்டெழுந்தனர்! ரயில்களை நிறுத்தினர், பல பெரும் கட்டிடங்களை தகனம் செய்தனர்! போலீசாரின் அடக்குமுறை பொடிப் பொடியாகிவிட்டது!

அதற்கடுத்து இராணுவம் வந்தது! அந்த அஞ்சா நெஞ்சம் படைத்த மாவீரர்கள் அப்போதும் பயப்படவில்லை! மேலும் கிளர்ச்சி வலுத்தது, மேலும் வலுத்துக் கொண்டே இருக்கிறது! அதன் விளைவாக, வங்காளத்து மக்கள் அந்த மண்ணை விட்டு தலைதெறிக்க ஓடி வெளியேறுகின்றனர்!

இந்த கோர நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிற இதே நேரத்தில் தான் சென்னை மாநிலத்திலும் மொழிக்கிளர்ச்சி, விடுதலைக் கிளர்ச்சி துவங்க இருக்கிறது!

அஸ்சாம் மாநிலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற சம்பவங்கள் தமிழ் நாட்டு அறப்போர் வீரர்களை தூண்டி விட்டுவிட்டால் தமிழ் நாட்டு அறப்போர் வீரர்களின் உள்ளங்களிலே அந்த ஆசை அரும்பிவிட்டால் என்ன செய்வது என்று தான் சென்னை அமைச்சர்கள் அஞ்சுகிறார்கள்!

அஸ்சாம் மாநிலத்தில் கொள்ளை, கொலைகள் நடைபெற்றன! சென்னையிலும் அது போல் நடந்து விட்டால்....?

அஸ்சாம் மாநிலத்தில் வங்காளத்து மக்களை விரட்டி விரட்டியடித்தனர்! சென்னையிலும் அதேபோல், மார்வாரி மக்களை, குஜராத்தி மக்களை விரட்டியடித்தால் என்ன செய்வது என்று பயப்படுகிறார்கள்!

அஞ்சி அஞ்சிச் சாகும் அமைச்சர்களுக்கு அபயம் தருகிறோம்! “எங்கள் அண்ணா இருக்கிறார்—அமைச்சர்களே! அஞ்சாதீர்கள், நடுங்காதீர்கள்” என்று ஆறுதல் மொழி கூறுகிறோம்!

உங்கள் காந்தியைவிட எங்கள் அண்ணா அகிம்சையில் பெரும் நம்பிக்கை வைத்திருப்பவர்! உங்கள் காந்தி “அகிம்சை, அகிம்சை என்று உபதேசம் புரிந்த நேரத்தில் நீங்களெல்லாம் தண்டவாளத்தைப் பெயர்த்தீர்கள், தந்திக் கம்பிகளை அறுத்தீர்கள், தபால் நிலையங்களை தீயிட்டுப் பொசுக்கினீர்கள்! நாங்கள் உங்களைப் போல் அடங்காப் பிடாரிகளல்ல! எங்கள் அண்ணா இட்ட கட்டளையை ஒரு நாளும் மீற மாட்டோம்! அவர் கிழித்த கோட்டை விட்டு ஒரு அங்குலமும் நகரமாட்டோம்! இது உறுதி, இது உறுதி!

அஸ்சாம் மாநிலத்து சர்க்காரைவிட நீங்கள் ஆயிரம் பங்கு அதிகமாகவே அடக்குமுறைகளை ஏவிவிடுவீர்கள்! என்றாலும் அஸ்சாம் இங்கே நடைபெறாது!

அஸ்சாம் போலீசைவிட இங்குள்ள போலீஸ் எங்களை அதிகமாகவே கொடுமைகளுக்குள்ளாக்கும்! என்றாலும் நாங்கள் ஒரு துளியும் பொறுமையை இழக்க மாட்டோம்!

அஸ்சாம் மாநிலத்தைப் போல் இங்கும் பட்டாளம் வரக்கூடும்! அப்போதும் நாங்கள் காலித்தனத்தில் இறங்க மாட்டோம்! ஆனால் இந்த நிலை என்றுமே நீடித்திருக்கும் என்று சொல்ல முடியாது! எங்கள் அறிவுலக மேதை அறிஞர் அண்ணா இருக்கிற வரையில் தான் இந்த அமைதியை, இந்த ஒழுங்கை, இந்த கண்ணியத்தை இந்தக் கட்டுப்பாட்டைக் காண முடியும்! அதற்குள் நீங்கள் ஏதாவது ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும்!

உங்கள் இலட்சியத்தை, உங்கள் கொள்கையை இன்னமும் ஒரே பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை! நாடெங்கும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு விட்டது! எங்கு பார்த்தாலும் “உரிமை, உரிமை” என்ற இதயகீதம் ஒலிக்க ஆரம்பித்து விட்டது! காலத்தை உணர்ந்து கொள்ளாவிட்டால் பெரும் தீங்கு விளையும் என்பதை தயவு செய்து மறக்காதீர்கள்!

இந்தியத் துணைக்கண்டம் ஒரு நாடு என்று கூறுகிறீர்கள், ஒரே இனம், ஒரே கலாச்சாரம், ஒரே பண்பாடு

(7ம் பக்கம் பார்க்க)

அசாம் வேண்டுமா?

அரசியல் நாகரீகம் வேண்டுமா?

அமைச்சர்கள்தான் இதை முடிவு செய்து கொள்ளவேண்டும்!

சைனாக்காரனைக் காட்டி மழுப்பாதே!

எல்லையைக் காக்கத் தயார் – எங்கள் கோரிக்கைக்கு இணங்கினால்!

சென்னையில் அறிஞர் அண்ணா முழக்கம்!

சென்னை மண்ணடி பவளக்காரத் தெருவில் 15-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணை மன்றமான அறிவு வளர்ச்சி மன்றத்தின் ஆண்டு விழா 9-7-60ம் தேதி மாலை நடைபெற்றது.

அது போது அறிஞர் அண்ணா அவர்கள் நீண்ட கை ஒலிகளுக்கிடையே பேசியதாவது,

அன்புள்ள தலைவர் அவர்களே, நண்பர்களே, பெரியோர்களே. தாய்மார்களே.

இன்று இந்த வட்டத்தில் நடைபெறும் இந்த மாபெரும் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமைக்குப் பெரிதும மகிழ்கிறேன்.

இன்று இந்தக் கூட்டத்தில் மிகவும் நெருக்கடியான நிலையில் பெருந்திரளாகக் கூடியிருக்கிறீர்கள். இடது பக்கமும், வலது பக்கமும் மிக ஏராளமான மக்கள் கூடி இருக்கிறீர்கள். நீங்கள் இவ்வளவு அரசியல் உணர்ச்சியுடனும், ஆர்வத்துடனும் இங்கு பெருந்திரளாக வந்திருக்கிறீர்கள். உங்களுக்கிருக்கும் இந்த ஆர்வத்தை ஆட்சியாளாகள் நன்கு உணாந்து பார்க்க வேண்டும். இன்று தமிழகத்தில் உள்ள மக்களுக்கு அரசியல் உணர்ச்சியும், விடுதலை வேட்கையும் ஏற்பட்டிருப்பது போன்று வேறு எந்தப் பகுதியிலும் காண முடியாது.

இங்குள்ள மக்களுக்கு அரசியல் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் இருப்பது போன்று வேறு எங்கும் கிடையாது. இந்தியத் துணைக் கண்டத்திலிருக்கும் மக்களில் தமிழகத்திலுள்ள மக்களுக்குத் தான் அரசியல் ஆர்வம் அதிமாக இருந்து வருகிறது.

இன்று வட நாட்டிலுள்ள மக்கள் அரசியல் சிககல்களில் ஈடுபட்டால் அதை வெறிச் செயல்களிலும், கொள்ளையடித்தல், கொலை புரிதல், நாசம் செய்தல் தீ வைத்தல் போன்ற பல அழிவுப்பாதைகளில் ஈடுபடச் செய்து அதனால் மக்களுக்கும், நாட்டுக்கும் தீங்கு விளைவிக்கும் வகையில் நடத்தி வருகிறார்கள். இதை நாம் நாள் தோறும் பத்திரிகைகளில் படித்து வருகிறோம்.

தமிழ் நாட்டிலுள்ள மக்கள் அரசியலில் வேறு பட்டு அரசியல் காரியங்களில் பங்கு பெற்று வருபவர்களாக இருந்தாலும் கூட்டங்கள் மூலமாக அரசியல் விளக்கங்களைப் பெறவும், அரசியல் கருத்துக்களை அறிந்து கொள்ளவும் ஆவல் கொள்கிறார்கள்.

இங்குள்ளவர்கள் வெறிச் செயல்களிலும், அழிவுப் பாதைகளிலும் போவதற்கு தங்களது மனதை ஈடுபடுத்துவதில்லை இந்த நாட்டிலிருப்பதைப் போன்று அரசியல் நாகரிகம் இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எங்கும் பார்க்க முடியாது.

இதை ஆட்சியாளர்களும், அமைச்சர்களும் நன்குஉணர்ந்து பொதுக் கூட்டங்கள் கூட்டுவதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்,

நான் இந்தக் கூட்டத்திற்கு இப்போது காஞ்சீபுரத்திலிருந்து வந்திருக்கிறேன்.

நான் இந்தக் கூட்டத்தில் இன்று கலந்து கொள்ள முடியுமா என்று மாலை 5 மணி வரை ஐயப்பாடு இருந்து வந்தது. நான் இன்றிரவு மதுரைக்குப் போக வேண்டிய நிலையிலிருந்து வருகிறேன்.

இன்று மாலை என்னுடன் இங்கிருந்து தொலை பேசி மூலம் நமது நண்பர் அ. பொ. அரசு அவர்கள் பேசினார். நான் எப்படியும் இந்தக் கூட்டத்திற்கு வந்து கலந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார்,

நான் நண்பர் அரசு அவர்களிடம் கூறினேன். இன்றிரவு அவசியம் மதுரை செல்ல வேண்டும், காஞ்சியிலிருந்து மதுரை செல்ல வேண்டுமானால் 80 மைல்கள் குறையும், சென்னை வந்து மதுரை செல்வதானால் 80 மைல்கள் அதிகமாகும் ஆகவே நான் வராமல் கூட்டத்தை நடத்துங்கள் என்று கூறினேன்

அதற்கு அரசு அவர்கள் கூறினார்கள், "அண்ணா நீங்கள் வரவேண்டிய வட்டம் எது தெரியுமா? நமது நகரசபை உறுப்பினர் நண்பர் செல்வராசு வட்டம் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்" என்றார்.

பின் நான் அவரிடம் சொன்னேன். அப்படியானால் அவசியம் வந்து கூட்டத்தில் பங்கு கொள்ளுகிறேன். ஆனால் கொஞ்சம் தமதமாக வருவேன், 9 மணியளவில் அங்கு வந்து விடுகிறேன் மக்களிடம் இதைக் கூறுங்கள் என்றேன் அவர்களும் நான் 9 மணிக்கு வருவதாகக் கூறியிருப்பார்கள். ஆனால் 15 நிமிடம் முன்னதாகவே வந்திருக்கிறேன் இந்தக் கூட்டத்திற்கு நான் வந்து கொண்டிருக்கும் போது ஒருவர் கூறினார். "அண்ணா, கூட்டம் கலைந்து விட்டதே இப்போதுவந்திருக்கிறீர்களே" என்று வருத்தப்பட்டார். நான் நினைத்தேன். கூட்டம் இருக்காது. அப்படியே காரில் இருந்த வண்ணம் இறங்காமலேயே போய் விடலாம் என்று எண்ணி வந்தேன்.

இங்கு வந்து பார்த்தால் ஏராளமான மக்கள்போயும்கூட இந்த இடத்தில் மக்கள் நிற்பதற்குக் கூட இடமில்லாது இங்குள்ள வீடுகளிலெல்லாம் நிற்க வேண்டிய நிலை இருந்திருக்குமென்று நினைக்கிறேன்.

நான் இப்படிக் கூறுவதால் இது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ, கூட்டங்களில் பேசுகின்றவர்களுக்கோ பெருமையோ, மதிப்போ ஏற்பட வேண்டுமென்பதற்காகக் கூறவில்லை,

இன்று நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டங்களில் கூறப்படுகின்ற— சொல்லுகின்ற கருத்துக்களுக்கு மக்களிடம் எவ்வளவு மதிப்பும் செல்வாக்கும் இருக்கிறது. அதைக் கேட்க வேண்டுமென்ற ஆவம் இருந்து வருகிறது என்பதை விளக்கவே இதைக் கூறுகிறேன்

(4ம் பக்கம் பார்க்க)

குழப்பம், கொள்ளை, தீயிடுதல்—வடநாட்டு அரசியல் !

நாகரீகம், பண்பாடு, கடமை உணர்ச்சி-தென்னாட்டு அரசியல்!

(அண்ணா பேச்சு)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றக் கழகம் இன்று நல்ல முறையில் வளர்ந்து வருகிறது என்பதற்கு அறிகுறி அதன் கூட்டங்களுக்கு மக்கள் திரள் திரளாக வருவதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

இன்று இந்த நாட்டில் அரசியல் நாகரீகம் வளர்ந்து மக்கள் பண்பாட்டுடனும், கண்யத்துடனும் இருக்கிறார்கள். என்பதை காட்டுவதற்காகத் தான் இங்கு அமளிகளிலும், கலவரங்களிலும் நாச வேலைகளிலும், நாகரீகமற்ற செயல்களிலும் மக்கள் ஈடுபடாதிருக்கிறார்கள்.

இன்று அசாம்மாநிலத்தில் நடக்கின்ற கோரச் செயல்களும், கொலை பாதகங்களும், கொள்ளைகளும் இங்கு நடைபெறவில்லை.

அசாம் மாநிலத்திற்கு இங்குள்ள பலர் சென்றிருக்க மாட்டீர்களென்று நினைக்கிறேன். நான் அங்கு பல ஆண்டுகளுக்கு முன் சென்று வந்திருக்கிறேன்.

கடந்த பத்தாண்டு கட்கு முன் நான் அசாம் சென்றேன்.

இந்த அசாம் மாநிலம் இயற்கை வனப்புகள் நிறைந்த மாநிலம்.

காடுகளும், ஓங்கி வளர்ந்த மரங்களும், மலைகளும், நிறைந்த ஒரு இடம் அது இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு இடமாக இன்று இருந்து வருகிறது.

இந்த பாரத கண்டம் பல் வேறு பிரிவுகளாகப் பிரிந்து, அரசியல் பிரிவினைகள் ஏற்படுவதற்கு இந்த அசாம் மாநிலத்திற்கு 'காமரூபம்' என்ற பெயர் சூட்டி அழைக்கப்பட்டது.

நான் இப்படிக் கூறுவதை நான் கூறுவதற்கு முன் தெரிந்து கொண்டிருக்க மாட்டீர்கள்.

தமிழ் நாட்டிலிருக்கும் நாம் இடுப்பில் வெள்ளைத் துணியைக் கட்டியிருக்கிறோம். தூரத்திலிருந்து பார்ப்பவர்கள். நாம் தூய்மையான வெள்ளைத் துணியைக் கட்டியிருக்கிறோம் என்று எண்ணுகிறார்கள், ஆனால் உழைத்து உழைத்து உடல் கருத்து, மேனி குறுகி இருப்பதை அறிய மாட்டார்கள்.

அசாம் மாநிலத்திற்குச் செல்ல வேண்டுமானால் நாம் மிகச் சுலபமாகச் செல்ல முடியாது.

பிரம்ம புத்திரா நதியைக் கடந்து அந்த மாநிலத்திற்குச் செலல வேண்டும் அந்த நதி இரண்டுமைல் நீள முடையது. அதை கடந்து செல்வதற்குப் படகுகளின் மூலம் செல்ல வேண்டிய நிலை ஏற்படும்.

அசாம் மாநிலம் மழை மிகுதியான பிரதேசம். வானத்தை முட்டும்படியாக வளர்ந்திருக்கும் அடர்ந்த மரங்களும். வனங்களும், தோட்டங்களும் இருந்து வருகிறது.

பச்சையான கம்பளங்கள் விரிக்கப்பட்டிருப்பது போன்று பசும் புல்கள் வளர்ந்த அழகான பூங்காக்கள் நிறைந்த இடம் அசாம்.

இதற்கு காமரூபதேசம் என்று பல ஆண்டு கட்டு முன் கூறப்பட்டு வந்ததென்று உங்களிடம் கூறினேன்.

இந்த அசாம். ஒரு காலத்தில் பர்மாப் பகுதியோடும், மங்கோலியப் பகுதியோடும் இருந்திருக்கிறது.

அசாம் மாநிலத்திருப்பவர்கள் சீன நாட்டிலுள்ளவர்களைப் போலவும் பர்மா நாட்டிலுள்ளவர்களை போலவும் இருப்பார்கள்.

சிவப்பும் வெள்ளையும் கலந்த ரோஜா மலரை ஒத்த நிறத்தில இருப்பார்கள்.

பர்மா காரனுடைய மூக்கைப் போன்று இவர்களுக்குத் தட்டையாக இருக்காது சீனக்காரர்களைப் பார்த்தவுடன் வயதை நிர்ணயிக்க முடியாதவாறு தோற்றங்கள் இருக்கும் புருவத்திலும் சீனர்களுக்கிருப்பது போன்று ரோமம் இருக்காது. நன்றாக அழகாகவும் கவர்ச்சியாகவுமிருப்பார்கள்

அப்படிப்பட்ட அசாம் நாட்டில் வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு இன்று நாட்டுப் பற்று—மொழிப் பற்று கலாச்சாரப் பற்று பிறந்து இரத்தத்தில் உரிமை உணர்ச்சி பிறந்திருக்கிறது.

கடந்த 10 நாட்களாக அசாமில் மிக பயங்கரமான சம்பவங்கள் அமைதியற்ற நிலைமைகள் நடந்து வருகிறது. ஏன் அங்கு அவ்வி தம் நடக்கிறது. அதைப் பற்றி நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்

அசாம் மாநிலத்திலுள்ளவர்கள் வங்காளிகளை அடிக்கிறார்கள், அசாமியர்களை வஙகாள மக்கள் வெறுக்கிறார்கள் அசாமியர்களை வங்காளிகள் அடிக்கிறார்கள் வங்காளியர்களின் வீடுகளுக்கு நெருப்பு வைத்து விரட்டி யடிக்கிறார்கள் இப படி இரு சமூகத்தாரும் வசதிக் கேற்றவாறு மாற்றி மாற்றி அடித்துக் கொள்கிறார்கள் இந்த நிலை இந்தியத் துணைக் கண்டத்திலிருப்பவர்களெல்லாம் அஞ்சும் நிலைமையில் நடந்து வருகிறது. ஏன் இந்த நிலை அங்கு வந்திருக்கிறது.

அசாமியர்களும் வங்காளியர்களும் மதத்தாலும் கடவுளை வணங்குவதிலும் வேறுபட்டவர்களல்ல இருவரும் சிவபெருமானையும், விஷ்ணுவையும், துர்க்கையையும் வணஙகி வருகிறார்கள். பண்டிகைகள். மத விழாக்களில் ஒற்றுமை யுடையவர்கள். ஆனல் தங்களது தாய் மொழியைப் பற்றி வரும் போது வேறாகி விடுகிறார்கள். அதனல் பல அநாகரீகச் செயல்களிலும், தீய வழிகளிலும் ஈடுபடுகிறார்கள் அப்படி ஈடுபடுவது முறையல்ல. இருந்தாலும் ஏன் இந்த வெறிச் செயல்கள் நடைபெறுகிறது.

அசாமிலுள்ள வங்காளிகளும் அசாமியர்களும் நேற்று வரை ஒற்றுமையாசவும் ஒருவரோடொருவர் அன்யோன்னியமாகவும், மிக நல்லவர்களாக இருந்து ஒரே இடத்தில் உணவருந்தி வந்தவர்கள். அந்த மாதிரி இருந்த இடத்தில் இன்று ஒற்றுமையின்றி விரோத மனப்பான்மை வளர்ந்து கத்திகளைக் கொண்டுத் தாக்கி கொண்டும், அரிவாள்களால் வெட்டிக் கொண்டும், பெண்களை இம்சித்தும் கற்பை சூறையாடிக் கொண்டும், கடைகளில் கொள்ளையடித்துக்கொண்டுமிருப்பதற்கான காரணங்கள் என்ன இந்த அட்டூழியங்களை போலீசாரால் அடக்க முடியாது இராணுவம் வர வழைக்கப்பட்டிருக்கிறது. ஏன் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மொழி மீது இருந்த பற்று—மொழியைக் காப்பாற்ற எழுந்த உணர்ச்சி இன்று இந்த அளவு அமளியில் கொண்டு போய் விட்டிருக்கிறது.

இந்த அமளியை அடக்க ஆட்சியாளர்கள்—அமைச்சர்கள் தங்களது புத்திசாலித் தனத்தைக் காட்டி யிருக்க வேண்டும்.

அடக்கு முறையாலே, இராணுவத்தாலோ, பட்டாளத்தாலோ, போலீசாலோ குழப்பத்தையும், அமளியையும் அடக்க முடியாது.

ஆட்சியாளர்கள் இராணுவத்தால முடியவில்லை யென்று கூர்க்கா பட்டாளத்தையோ, பஞ்சாபி பட்டாளத்தையோ அனுப்பி அடக்க முயற்சித்தால் அங்கும் வேறுமைகள் வளர்ந்து அங்குள்ளவர்களுக் கிடையே குழப்பங்கள் எற்பட்டு அவர்களே தாக்கிக் கொள்வார்கள். இதனல் அடக்கு முறைகளை வீசுகின்றவர்கள் தான் அவதிக்குள்ளாவார்கள் ஆகவே பெரும், பெரும் கலவரங்களையும், கிளர்ச்சிகளையும் அமளிகளையும் ஆரவாரங்களையும் அடக்கு முறைகளை வைத்து அடக்கப் பார்ப்பது ஆபத்தானதாகும் வழக்கமாக இரண்டு நண்பர்கள் தினமும் ஒரு காப்பிக் கடைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்,

பின் நண்பர்களில் ஒருவர் அந்தப் காப்பிக் கடைக்குப் போவதை நிறுத்திக் கொண்டார், இது நண்பனுக்கு புரியவில்லை நண்பனைக் கேட்டால் அங்குள்ள பொருள்களைப்பற்றி குறை கூறினர். ஆனல் காரணம் என்னவாக இருக்க வேண்டுமென்றால், ஓட்டல்காரனுக்குக் கடன் கொடுக்க வேண்டியதாக இருக்கும். இல்லாவிட்டால் தனக்கு வேண்டியவன் ஓட்டல் வைத்திருக்க வேண்டும். அதை விளம்பரப்படுத்த இவன் போகாமலிருக்க வேண்டும். தான் காரணமாக இருக்க முடியும்.

வங்காளிகள் இன்று அசாமை விட்டுக் குடும்பம் குடும்பமாக செல்கிறார்கள். அதே போன்று அசாமியர்களும் சாரை சாரையாக வங்காளத்தை விட்டுச் செல்கிறார்கள். ஏன் இப்படிப் பட்ட நிலை ஒவ்வொரு வரும் தங்களுக்குள்ளேயே ஒரு முடிவுக்கு வந்து அவரவர்கள் நாட்டில் தண்ணீர்சாதமாவது சாப்பிட்டு வாழலாம், வெறும் தண்ணீரைக் குடித்தாவது சாகலாம் என்று சாரசாரையாகச் செல்கிறார்கள்.

முன்பு பாக்கிஸ்தானிலிருந்து இந்தியாகள் வந்ததைப் போன்றும், இந்தியாவிலிருந்து பாக்கிஸ்தானுக்கு முஸ்லீம்கள் சென்றதைப் போன்றும் இன்று வங்காளிகள் அசாமிலிருந்து புறப்படுகிறார்கள். இன்று வங்காளிகளுக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையைப் பார்க்கும் போது நமக்குப் பரிதாபமாகத் தான் இருக்கிறது.

ஒரு வீட்டில் ஒரு பூனை அடுக்குகளைச் சென்று அங்கிருப்பவைகளை உருட்டி தொல்லை கொடுக்கிறதென்றால் என்ன செய்வார்கள். பூனையை அடிப்பது பாவம், பூனையை அடிக்கக் கூடாதென்று எண்ணுபவர்கள் கூட கையில் கிடைத்ததை எடுத்து வீசி பூனையை விரட்டுவார்கள். அது போன்று தான் இன்று வங்காளிகளை அசாமியர்கள் விரட்டுகிறார்கள்.

அசாம் நாட்டில் பெரும்பாலும் வங்காளிகள் வந்து குடியேறி வியாபாரங்களையும், தொழில் நிலையங்களையும் கைப்பற்றி பெரும் செல்வத்தைப் பெருக்கி வசதியோடும் செல்வாக்கோடும் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள்:

வங்காளத்தில் பிறந்த வங்காளி வங்காளத்தில் வாழாது அசாமுக்கு வந்து அசாம் நாட்டில் பெரும் வசதியுடனும், செல்வத்துடனும் வாழலாம், வங்காளத்தை விட அசாமில் வியாபாரங்களும், தொழில்களும், செய்து நிம்மதியான வாழ்க்

(10-ம் பக்கம் பார்க்க)

ஆகஸ்ட் விடுதலைப் போராட்டத்தில் பிணமாகத் துடிக்கும் வீரர்கள் !

2,00000!

மதுரையில் மானம் காக்கப் புறப்படும் வீரமறவர்களின் எண்ணிக்கை!

10,000

தஞ்சையும், திருச்சியும் - மதுரையோடு போட்டி யிடுகின்றன !

கோவையும், சேலமும் வீரகர்ஜனை புரிகிறது !

சென்னையோ செந்நீர் வெள்ளத்தில் மூழ்கும் !

திராவிடத்தின் விடுதலை வீரர்கள் குமாரபாளையத்தில் செய்த முடிவுப்படி ஆகஸ்டு 31-ம் தேதி உலகத்தையே குலுங்க வைக்கும் முறையில் கண்டன ஊர்வலமும்—அதற்குப் பின் துவங்க இருக்கிற போராட்டமும் நடைபெறும் என்ற செய்தி நாலா பக்கங்களிலுமிருந்து வந்த வண்ணமிருக்கின்றன!

மதுரையிலிருந்து ஒரு செய்தி-அதற்கடுத்த நிமிடம் திருச்சியிலிருந்து ஒரு செய்தி—அதற்கடுத்த நிமிடம் தஞ்சை, கோவை, கடலூர் இப்படி ஒவ்வொரு ஊரிலிருந்தும்—நாமே திகைத்து ஒரு கணம் ஆச்சரியம் கொள்ளும் வகையில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன!

“மதுரையிலே பத்தாயிரம் பேர் மானம் காக்கப் புறப்பட்டு விட்டனர்—எங்கள் முத்து காற்றாடியைப் போல் சுற்றிச் சுற்றி, பறந்து பறந்து படை வீரர்களைத் திரட்டி வருகிறார்” என்று மதுரை தோழர்கள் மகிழ்ச்சியோடு கூறுகின்றார்கள்!

“மதுரையிலே பத்தாயிரம் பேர்களா? அப்படி என்றால் எங்கள் ஊர் இன்னொரு ஆயிரத்தை அதிகமாகத் தரும்—அம்பில் தர்மலிங்கம் பேப்பர், பென்சிலோடு கிளம்பி விட்டார் பட்டியலைத் தயாரிக்க” என்று திருச்சி மாவட்டத் தோழர்கள் குதூகலம் நிறைந்த செய்திகளைத் தந்து கொண்டே இருக்கிறார்கள்!

“தஞ்சை! தியாகிகளுக்குப் பஞ்சமில்லை! பட்டி தொட்டி எங்கும் படை வீரர்கள் காத்து நிற்கின்றார்கள்—எங்கள் இளங்கோ இன்னொரு ஆயிரத்தை அதிகமாகத் தருவார்” என்று தஞ்சை மக்கள் பொங்கி எழும் ஆர்வத்தோடு பேசுகிறார்கள்!

“கோவை! சம்பத் பிறந்த மாவட்டம்—ஞாபக மிருக்கட்டும்” என்று கர்ஜிக்கிறார்கள்!

“சேலம்! முதுபெரும் கிழவரைப் பெற்ற ஊர்! எத்தனை போ போராட்டங்களைக் கண்டு, கண்டு நெஞ்சத்திலே வைரம் பாய்ந்துவிட்ட அந்த பொல்லாத கிழவர் துடித்தெழுந்து விட்டார்—ஆமாம்-எங்கள் சோமசுந்தரம் தரும்பட்டியலைப் பார்த்தால் நீங்களே திடுக்கிடுவீர்கள்” என்று பெருமையோடு பேசுகிறார்கள் !

“சென்னை ! செந்நீர் வெள்ளத்தில் மூழ்கும் ! தார் போட்ட கருப்புநிற வீதிகளெல்லாம் செக்கச் சிவந்த வீதிகளாக மாற்றி யமைக்கும் எங்கள் செங்குருதி, செங்குருதி என்று சென்னை மக்கள் கொதித்துவிட்ட கோபக் கனலோடு கூறுகிறார்கள்! “குண்டாந்தடிகளா—மார்பைக் காட்டுவோம்! குதிரைப் பட்டாளங்களா—அதன் குளம்படிகளில் மிதிபட்டுக் கிடப்போம்! போலிசா—கடமையை செய்வீர், கடமையை செய்வீர் என்று கூறுவோம்! இராணுவமா—எண்ணிப்பாருங்கள், எண்ணிப் பாருங்கள், எங்கெங்கோ என்னென்னவோ நிகழ்கின்றன—நீங்கள் நினைத்தால்—தாழ்ந்து கிடக்கும் தமிழ் நாட்டைப் பற்றி நீங்கள் கொஞ்சம் சிந்தித்தால்... “வார்த்தையை முடிக்காமலேயே அவர்களுக்கு கொள்கை விளக்கம் தருவோம்” என்று மக்கள் பொறி பறந்தம் கண்களோடு கூறுகிறார்கள்!

சென்னை நகரசபை உறுப்பினர்கள் “ஆளுக்கொரு ஆயிரம்-ரூபாய்கள் அல்ல-துப்பாக்கி முனைக்கும் அஞ்சாத இளஞ்சிங்கங்களைத் தருவோம்” என்று உணர்ச்சி ததும்ப பேசுகிறார்கள்!

செங்குட்டுவன் தரும் பட்டியலோ அதற்கும் அதிகம், அதற்கும் அதிகம்!

தமிழகம் ஒரு இரண்டு இலட்சம் மக்களை சிறைக்கனுப்புமா என்பதில் ஒரு துளியும் சந்தேகமில்லை!

இரண்டு இலட்சம் மக்களில் துப்பாக்கி குண்டுகளுக்கு பலியாகி மடிபவர்கள் எத்தனை பேர்! எத்தனை பேர்! அது எங்களுக்கே தெரியாது!

அந்த இரண்டு இலட்ச மக்களில் எத்தனை பேர் கண்களை இழந்து குருடர்களாவார்கள்—அதுவும் தெரியாது! அதுவும் தெரியாது!

அந்த இரண்டு இலட்சம் மக்களில் எத்தனை பேர்களுடைய கால்கள் போகும், கரங்கள் போகும்—ஐயோ, அதுவும் தெரியாது, அதுவும் தெரியாது!

அந்த இரண்டு இலட்சம் மக்களுமே அழிந்து விட்டாலும், அதற்காக கொஞ்சமும் அஞ்ச மாட்டோம், துளியும் கவலைப் பட மாட்டோம்! இந்தி ஒழிகிற வரையில், திராவிடம் விடுதலைப் பெறுகிற வரையில் போராட்டம் நடைபெறும்!

எங்கள் போராட்டக் குழுத் தலைவர் சம்பத் பிணமாகி விட்டாலும், எங்கள் பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் ரத்த வெள்ளத்தில் மிதக்க நேரிட்டாலும்-ஏன் எங்கள் கண்ணான அண்ணாவின் உயிரையே பலி கொண்டாலும் போராட்டம் நிற்கவே நிற்காது! நாங்கள் எல்லோருமே அழிந்து விட்டாலும்—எங்கள் பெண்டு பிள்ளைகள் களத்திற்கு வந்து உங்களை எதிர்ப்பார்கள்!

உள்ள நிலையை உணர்ந்து ஆட்சியாளர்கள் இந்தியை வாபஸ் வேண்டும், திராவிடத்தின் விடுதலைக்கு உத்திரவாதம் தர வேண்டும்! இல்லையேல் தமிழகம் முழுவதும் வெறும் பிணமலைகளைத் தான் காண முடியும்! அதன் பிறகு காடு சுடுகாட்டு அமைதியில் ஆழ்ந்து கிடக்கும்! அதைத் தான் நமது அமைச்சர்களும் ஆளவேண்டும்!

14

சஞ்சலம் தீருமா?

"சமூக சேவைக்குப் போன பெண்ணைக் காணவில்லையே" என்ற ஆயாசத்தோடு தனசேகரம் பிள்ளை சோபாவில் உட்கார்ந்திருந்தார்? "ஏதோ கௌரவத்திற்காகவும், புகழுக்காகவும் சமூக சேவை செய்யச் சொன்னால், இந்தப் பெண் தன் வாழ்நாளையே அதில் அர்ப்பணித்து விடுகிறாளே! வாழத் தெரியாதவள்! படித்துப் பட்டம் பெற்று விட்டால் மட்டும் போதுமா? உலகத்தைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டாமா" என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தார்!

இந்த நேரத்தில் வெளியில் ஹாரன் சப்தம் கேட்டது! "அப்பாடா உயிர் வந்தது" என்று தனசேகரம்பிள்ளை பெருமூச்சு விட்டார்!

"கமான் சேகர், கமான் டேக் யுவர் சீட்! உட்காருங்க லாசர்—நான், ட்ரஸை சேஞ்சி பண்ணிக்கிட்டு வர்றேன்" என்று கூறிக் கொண்டே மாடிப் படிகளை ஒரு விநாடியில் கடந்து மேலே சென்றான்!

"என்னம்மா! இவ்வளவு நேரம் வெளியிலே தங்கலாமா!" தனசேகரம் பிள்ளை பரிவோடு கேட்டார்!

"தங்கினால் என்னப்பா, நான் இன்னும் பாப்பாவா என்ன" சாந்தா கபடமில்லாதவள் போல் பேசினாள்!

"நீ ஒரு வயசு வந்த பெண்ணு இரவு முழுதும் வெளியிலே சுற்றிக் கொண்டு இருந்தால் ஊர் பலவிதமாகப் பேசும்" தனசேகரம்பிள்ளை தன் மகளுக்கு உபதேசம் செய்ய ஆரம்பித்தார்!

எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் சாந்தா விடுவிடு என்று கீழே இறங்கினாள்!

"என்னம்மா, எங்கே போறே?" தனசேகரம்பிள்ளை ஆவலோடு கேட்டார்?

சாந்தா பதிலே சொல்லாமல் கீழே இறங்கி போய்க் கொண்டிருந்தாள்!

"எதற்காக கீழே போகிறாள்" என்ற கவலையோடு தனசேகரம் பிள்ளையும் கீழே இறங்கினார்! கீழ் ஹாலில் அறிமுகமில்லா இரண்டு இளைஞர்கள் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டார்! "யாரம்மா" இவர்கள் என்று கேட்கவும் செய்தார்!

"அப்பா! ஐயாம்சாரி இவர்கள் என் கூட வேலை செய்கிறவர்கள்! மிகவும் நல்லவர்கள்—இவர் பெயர் லாசர் இவர் பெயர் சேகர்" என்று தன் தந்தைக்கு அறிமுகம் செய்து வைத்தாள்!

அவர்களும் எழுந்து "நமஸ்காரம்" என்று கும்பிட்டு விட்டு உட்கார்ந்தார்கள்!

'வேலையெல்லாம் எப்படி இருக்கு தம்பி' என்று சேகரைப் பார்த்து தனசேகரம் பிள்ளை கேட்டார்!

'என்ன வேலைங்க, முட்டாள் பசங்களைக் கட்டிக்கிட்டு அழ வேண்டி இருக்கு" என்று சேகர் பதில் சொன்னான்!

"படிக்காதவங்க, எதும் தெரியாதவங்க அப்படித் தான் இருப்பாங்க" தனசேகரம்பிள்ளை மக்களுக்குப் பரிந்து பேசினார்!

"அந்தப் பசங்களுக்கா ஒண்ணும் தெரியாது! ஊரையே விலைக்கு வாங்கிடுவாங்களே!" சேகர் உள்ள நிலையை [illegible] சொன்னான்!

"ஆமாம், ஆமாம்! காலம் கலி காலமல்லவா!" தனசேகரம் பிள்ளையும் ஒத்து ஊதி தாளம் போட்டார்!

"நாங்களும் அந்த பசங்களுக்கு ஏற்றவாறு தான் நடந்து கொள்ளுகிறோம்!" லாசர் குறுக்கிட்டு பதில் சொன்னான்!

இருவருடைய சஞ்சலத்திற்கும் முடிவே ஏற்படாதா?

"அவுங்க எப்படி இருந்தா உங்களுக்கென்ன, உங்க கடமையைச் செய்தா சரி தான்!" தனசேகரம்பிள்ளை பொறுப்பு உணர்ச்சி கொண்டவரைப் போல் பேசினார்...

"இந்த காலத்து பசங்களிடம் கடமையை செய்து என்ன பயன்?" லாசர் எதையோ நினைத்துக் கொண்டு பதில் சொன்னான்!

"ஏன்?" தனசேகரம்பிள்ளை ஆச்சரியத்தோடு கேட்டார்?

"எல்லோரும் நன்றி மறந்த பசங்கள்!"

"எதைக் கொண்டு லாசர் இப்படிச் சொல்லுகிறீர்கள்!" தனசேகரம்பிள்ளை ஆவலோடு பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்!

"அவர்களுக்கு தொண்டும், சேவையும் செய்வது நாம், நம்முடைய ஆட்சி! ஆனால் அவர்கள் விரும்புவதோ, அவர்கள் ஆதரிப்பதோ வேறு கட்சியை!" லாசர் விளக்கம் தந்தான்!

"எந்தக் கட்சியை ஆதரிக்கிறார்கள்!" தனசேகரப்பிள்ளைக்கு பெருத்த கவலை ஏற்பட்டு விட்டது!

"எந்தக் கட்சியை ஆதரிப்பார்கள்! எல்லாம் அந்த தீனமூனாக்களைத் தான்! லாசர் கரகரத்த குரலோடு பதில் சொன்னான்!

"ஏன் அப்படி செய்கிறார்கள்? பட்டினத்தில் இருந்த மசல் வாக்கு கிராமத்திற்கும் வரக் காரணம் என்ன?" தனசேகரம் பிள்ளை ஆபாயத்தோடு கேட்க ஆரம்பித்தார்!

"என்னப்பா! இதெல்லாம் ஒரு கேள்வி! அழகா பேசுறானுவோ—அந்த அப்பாவி மக்களை ஏமாந்து அந்தக் கூட்டங்களில் சேர்ந்து கொள்ளுகின்றனர்!" சாந்தா குறுக்கிட்டு பதில் சொன்னாள்!

"என்னப்பா! நீ சொல்லுவதைக் கேட்டால் சிரிப்புத் தான் வருது! அழகா பேசுறாங்க, அழகாபேசுறாங்க என்று சொல்ல உங்களுக்கெல்லாம் வெட்கமாக இல்லியா? நீங்களும் தான் படிச்சு, பட்டமும் வாங்கி இருக்கிங்க! என்ன பயன் தனசேகரம் பிள்ளை கொஞ்சம் வெறுப்போடு தான் சொன்னார்!

"போங்கப்பா! இந்த முட்டாள் பசங்களின் ஆதரவு நமக்கு எதுக்கு?" சாந்தா உலகம் தெரியாது பேசினாள்!

"அந்த முட்டாள் பசங்களிடம் தான் ஓட்டு இருக்கும். ஞாபகத்தில் வைச்சுக்கோ அம்மா, ஞாபகத்தில் வைச்சுக்கோ!

'சரி, சரி உங்களுக்குள் எதற்குச் சண்டை' என்று சேகரும், லாசரும் சமாதானம் செய்து விட்டு புறப்பட்டான்! தனசேகரம் பிள்ளையும், சாந்தாவும் மாடிக்குச் சென்றனர்!

சாந்தாவைப் பற்றி எதுவுமே தெரிந்து கொள்ள முடியவில்லையே! கல்யாணம் என்றால் வெறுக்கிறாள்! வேண்டாம் என்று பிடிவாதம் பிடிக்கிறாள்! அதன் மர்மம் தான் என்ன? இரவு பத்து மணி வரை வயது வந்த பையன்களோடு சுற்றித் திரிகிறாளே! இதைப் பற்றி உலகம் என்ன நினைக்கும்! சாந்தா ஏதாவது தவறாக நடந்து கொண்டிருப்பாளோ! சேச்சே! நம்முடைய குடும்பத்தில் அந்த அவலப் பெயரே ஏற்படாது. இதுவரை ஏற்பட்டதுமில்லை!

ஆனால் சாந்த அந்தப் பையன்களோடு பழகும் விதத்தைப் பார்த்தால் எனக்கே சந்தேகமாகத்தான் இருக்கு! பழகும் விதத்தைக் கண்டு மட்டும் சந்தேகப்பட்டுவிட முடியுமா?

படித்தவர்கள், நாகரீக காலத்தில் வாழ்பவர்கள்! சாதாரணமாகவும் நெருங்கிப் பழகலாம்!

தனசேகப்பிள்ளையின் மனம் இப்படி சஞ்சலத்தில் ஆழ்ந்து கலந்து கொண்டிருந்தது!

சாந்தாவுக்கும் தூக்கம் வரவில்லை! என்னைப் பற்றி அப்பா ஏதாவது சந்தேகம் கொண்டிருப்பாரோ! நான் தினமும் இப்படி சுற்றித் திரிந்தால் யாரும் சந்தேகப் படத் தானே செய்வார்கள்! சந்தேகப் படட்டுமே! என்ன தவறு செய்து விட்டோம்! மனித இனம் செய்யாத, செய்யக கூடாத காரியங்களை நான் ஒன்றும் செய்யவில்லையே!

அப்பாவிடம் எதையும் மறைக்காமல் சொல்லி திருமணத்திற்கும் ஏற்பாடு செய்து விட்டால் சேச்சே! அப்பா நம்மை கேவலமாக அல்லவா நினைத்து விடுவார்! அவருக்கு இருக்கும் செல்வாக்கு என்ன? பேரு என்ன? புகழ் என்ன? அதற்கு நாம களங்கத்தை உண்டாக்கலாமா? கூடாது, கூடவே கூடாது!

அப்பாவுக்கு இருக்கிற செல்வாக்கினால் தானே நாமும் செல்வாக்காக மதிப்பாக இருக்க முடிகிறது!

சாந்தாவும் இப்படி சஞ்சலத்தில் மூழ்கிக் கிடந்தாள்!

(வளரும்)

போலீசார் இன்று அம்புகள்!
அதை எய்பவர்கள் ஆட்சியாளர்கள்!
கொடுமை செய்த ஆட்சி என்றும் நிலைத்ததில்லை!

(நெடுஞ்செழியன் பேச்சு)

(12ம் பக்கத் தொடர்ச்சி)

அவருடன் இப்போதுள்ள கேடுகளை எல்லாம் விளக்கிப் பேசப் போகிறேன். அதற்கப்புறம் ஆக வேண்டியதைப் பார்த்துக் கொள்ளலாம்.

மக்களை என்றும் பயங்காளிகள்—கோழைகள் -வீரமற்றவர்கள் என்று ஆட்சியாளர்கள் எண்ண வேண்டாம்.

"பூனை ஒரு நாள் புலியாக மாறத்தான் செய்யும்" என்ற பழமொழிப்படி நாங்கள் பூனையாகவே இருக்க மாட்டோம.

ஒரு பூனையை ஒரு முரடன் ஒரு தடி கொண்டு தாக்க ஆரம்பித்தால் அது தப்பிப்பதற்கான வழிகளை யெல்லாம் செய்து பார்க்கும் அதற்கெல்லாம் தடை ஏற்பட்டால் ஜன்னல் வழியாகவோ, கதவு இருக்கும் வழியாகவோ தப்பித்து ஓட வழி பார்க்கும். அதை அடைத்து விட்டு ஓட முடியாமல் செய்து விட்டால் பூனை என்ன நினைக்கும் இனி நாம் தப்புவிக்க முடியாது, நம் உயிருக்கு ஆபத்து வந்து விட்டது என்று நினைக்கும் கடைசியாகவும் தன்னை பாதுகாக்க வழி என்ன என்று யோசிக்கும் பின் உடனே தன்னை புலியென நினைத்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கண்ணைப் பிடுங்கி விடும்.

பூனை சாதுவானது தான் அது மற்றவர்களைக் கண்டால் பயந்து ஓடத் தான் செய்யும் தனக்குக் கேடு வரும் என்று நினைத்தால் அந்தக் கேட்டிலிருந்து விடுவித்துக் கொள்ள கொடும புலியாக மாறி விடுகிறது.

அது போன்று தான் இன்று நம்மைப் பார்த்து. கோழைகள், வீரமற்றவர்கள், என்றும் அடிமைகளாகவே இருப்போம் என்றும் ஆட்சியாளர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நமக்கு விடுதலை எண்ணமே வராது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நமக்குத் தொல்லைகளும், தீங்கும் இழைத்து வருகிறார்கள். மக்கள் என்றும் தூங்கிக் கொண்டிருக்க மாட்டார்கள். இதை ஆட்சியாளர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

புலியானது தூங்கிக் கொண்டிருந்தது. அதை ஒரு குருடன் இடறி விட்டானும், தூக்கத்திலிருந்து புலி எழுந்தால் நிலை என்ன வாகும்.

அடக்குமுறைகளையும் எதேச்சாதிகாரத்தையும் மக்கள் காணக் காண அவர்கள் உள்ளம் கொதிப்பேறும். மக்கள் உள்ளம் கொதிப்படைந்தால் எந்த ஆட்சியும் நிலைத்திருக்க முடியாது.

வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கொடுமைகள் செய்கின்ற ஆட்சி நிலைத்திருக்காது என்று அழகுபட கூறியிருக்கிறார்.

மேலும் வள்ளுவர் கூறி இருக்கிறார். மக்களைக் கொடுமைப் படுத்தியும், இம்சித்தும். அடக்குமுறைகளையும் அளவற்ற முறையில் வீசி வருகின்ற எந்த அரசும் நிலைத்திருக்காது என்று சொல்லி இருக்கிறார்.

இராயிரம் ஆண்டுகட்கு முன் சொல்லப்பட்டிருக்கும் இந்த அறவுரையை ஆட்சியாளர்கள் பின்பற்ற வேண்டும்.

"கடுமொழியும் கையிகழ்ந்த தண்டமும் வேந்தன் அடுமுரண் தேய்க்கும் அரம்"

இந்தப் பாடலை நமது மாநில ஆட்சியாளர்கள் எண்ணி செயல்பட விரும்புகிறேன்.

இந்த நாட்டில் ஆட்சி புரிந்து வருகின்ற ஏகாதிபத்திய இந்தி வெறியர்கள் இந்த நாட்டில் இருக்கின்ற மக்களெல்லாம் சொரணையற்றவர்கள், சூடற்றவர்கள், சொந்த புத்தியில்லாதவர்கள். வடவர்களின் எடுபிடிகள், கையாட்கள் என்று எண்ணியிருக்கிறார்கள்.

இங்குள்ள எல்லோரும் காமராசர்களாக இருக்க மாட்டார்கள், கக்கன்களாக இருக்க மாட்டார்கள், சுப்பிரமணியம்களாக இருக்க மாட்டார்கள்.

நாட்டுப் பற்றும், விடுதலை உணர்ச்சியும், மொழிப்பற்றும் கொண்டவர்கள் தான் என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்!

மொழி அழிந்தால் நாடு அழியும் மொழியை அழித்தால் தான் ஒரு நாட்டை அடிமைப் படுத்த முடியும்!

நமது தாய் மொழி அழிந்தால் நமது தமிழுக்கு ஆபத்து வந்தால் நமது தமிழ் நாடு அழிந்து விடும், நம் நாட்டிலுள்ள மக்களே வடவர்களுக்கு அடிமையாவார்கள்.

இந்தியை தமிழ் நாட்டில் புகுத்தக் கூடாதென்று கூறுகிறோம்.

வட நாட்டில் இந்தி இருப்பதைப் பற்றி நாம் ஆட்சேபிக்கவில்லை. அவர்கள் நாட்டில் அவர்கள் மொழியை வைத்துக் கொள்ளட்டும்.

நாம் இந்தியை 1938ம் ஆண்டு முதல் எதிர்த்து வருகிறோம். அதற்குப் பின் ஓமந்தூரார் காலத்திலும் இந்தியை எதிர்த்திருக்கிறோம்.

ஆகவே இப்போது புதிதாக நாம் இந்தி எதிர்ப்புப் போராட்டம்நடத்தவில்லை.

இப்போது நாம் நடத்துகின்ற போராட்டம் நமது மொழியைப் பாதுகாக்க நடக்கும் அறப்போராட்டம் இது நமது நாட்டை விடுவிக்க நடக்கும் விடுதலைப் போராட்டம்.

இந்தப் போராட்டத்தை முதலமைச்சர் காமராசரும் சி. சுப்பிரமணியமும் கிண்டலும் கேலியும் செய்கிறார்கள். அதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை.

நாம் நம்முடைய கடமையைச் செய்வோம். ஆட்சியாளர்கள் துப்பாக்கியையும், குண்டாந்தடியையும், தோட்டாக்களையும் வைத்து நம்மை அடக்கி விடலாம் என எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் எதிர்பார்த்தே நாம் இந்தப் போராட்டத்தை நடத்துகிறோம். உயிரைப் பணயம் வைத்தே இந்தப் போரில் இறங்குகிறோம்.

தன்மானமுள்ள தமிழர்களெல்லாம் இந்தப் போரில் பங்கு கொண்டு நாட்டின் தன் மானத்தைக் காக்க முன் வரும்படி கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

வணக்கம்.

[இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே மொழி என்று சொல்லுகிறீர்கள்! அப்படி என்றால் அஸ்சாம் சம்பவம் நடைபெறக் காரணம் என்ன?

மராட்டியர்கள் மொழிக் கிளர்ச்சி செய்தனர். தனி மாநிலம் கேட்டுப் பெற்றனர்! இதற்குப் பொருள் என்ன? ஒரே இனமா? ஒரே பண்பாடா? ஒரே கலாச்சாரமா? ஒரே மொழியா?

குஜராத்தி தனி மாநிலத்தைக் கண்டு பெருமையடைகின்றனர்!

ஆந்திரர்களும் "வெற்றி, வெற்றி" என்று தினம், தினம் முழங்கிக் கொண்டே ஆட்சி புரிந்து வருகின்றனர்!

இன்றோ அஸ்சாம் மக்கள் மொழிக் கிளர்ச்சி செய்கின்றனர், உரிமைக் கிளர்ச்சி செய்கின்றனர்! ஒரே நாடு என்றால் இந்தத் திரு கூத்துகளெல்லாம் ஏன் நடைபெற வேண்டும்!

இந்தியா ஒரே நாடு என்பது வெறும் கற்பனை, பகற்கனவு—பாலைவனத்தில் காணும் கானல் நீர்! அழகிய நிலைக் கண்ணாடியில் காணப்படும் அழகு ததும்பும் வசிகர உருவம்!

இந்த கற்பனையைக் கண்டு, கண்டு காலத்தை வீணாக்க வேண்டாம்! நாம் தனி நாட்டினர், நாம் தனி இனத்தவர், நாம் தனி மொழியினர் என்பதை அமைச்சர்கள் உணர வேண்டும்! அப்படி உணரா விட்டால் காலம் கட்டாயம் உணர வைக்கும்!

தென்புலத்தவர் வேங்கையென வீறு கொண்டெழுந்து விட்டனர்! இனி அவர்களை அடக்கவோ, ஒடுக்கவோ முடியாது என்பதை நமது அமைச்சர்கள் உணர்வார்கள் என்றே நம்புகிறோம்!

தென்னகத்தில் துவக்கப்பட இருக்கிற விடுதலைப் போரில் எதும் கலகம் இருக்காது, எதும் நாச வேலைகள் இருக்காது! அமைச்சர்கள் கொஞ்சமும் இதைக் கண்டு அச்சப்பட வேண்டாம்! இதை நாங்கள் மட்டும் நினைத்தால் போதாது. அமைச்சர்களும் நினைக்க வேண்டும்!

அமைதி நிலவ வேண்டுமானால் அமைச்சர்களும், அமைச்சர்களைச் சார்ந்த கட்சியினரும் பெரும் பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும்!

எங்கள் அண்ணா மிக்க பொறுப்போடு பணியாற்றுவார்! அதே போல் உங்கள் தரப்பிலும் இருக்க வேண்டும்! இந்த உறுதியை அமைச்சர்கள் தருவார்களா?

சஞ்சீவி ரெட்டியை காங்கிரஸ் இளைஞர்கள் துரத்தி யடித்தார்கள்!

இந்தியா பிரிந்து விடும், சிதைந்து விடும்; உடைந்து விடும் என்று ராஷ்டிரபதி ஓலமிடுகிறார்!

பாட்னா காங்கிரஸ்காரர்களே! வாழ்க, நீடூழி வாழ்க! இன்று போல் என்றும் தாய் மொழி பாசத்தோடு வாழ்க!

"கழகமாவது. கட்சியாவது—இந்தியாவது, எதிர்ப்பாவது—பிரிவினையாவது, தனி நாடாவது—இதெல்லாம் வெறும் காட்டுக் கூச்சல், கவைக்குதவாதப் பேச்சு, கத்துக் குட்டிகளின் சொத்தை வாதம்" என்று சங்கநாதம் செய்து வந்த திருவாளர் சஞ்சீவி ரெட்டிகாருவின் கண்களை பாட்னா மக்கள் திறந்து வைத்து விட்டார்கள்!

"யார் அந்த அண்ணாதுரை" என்று கேட்டவருக்கு இவர் தான் அந்த அண்ணாதுரை" என்று பாட்னா காங்கிரஸ் இளைஞர்கள் அறிமுகம் செய்து வைத்து விட்டார்கள்!

தூங்கிக் கிடந்த சஞ்சீவி ரெட்டிகாரு துடித்தெழுந்து விட்டார்! "இந்தியா, உடைந்து விடும். சிதைந்து விடும், நொருங்கி விடும், பிரிந்து விடும்" என்று முழக்கம் செய்ய ஆரம்பித்து விட்டார்!

"வாழ்க! பாட்னா மக்களே நீடூழி வாழ்க! நீடூழி வாழ்க! இன்று போல் என்றும் மொழிப் பற்றோடு வாழ்க! என்று 'உங்களை வாழ்த்துகிறோம்!

காங்கிரஸ் இளைஞர்களே! உங்கள் வீரத்தைப் பாராட்டுகிறோம்! உங்கள் தீரத்தைப் போற்றுகிறோம்! சஞ்சீவி ரெட்டிகாரு அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் தான்! என்றாலும் துணிவோடு எதிர்த்திருக்கிறீர்கள்! உங்களுக்கெல்லாம் அவர் தலைவர் என்று கூட பாராமல் தைரியத்தோடு எதிர்த்திருக்கிறீர்கள்! உங்கள் அஞ்சா நெஞ்சத்தைப் பாராட்டாமல், போற்றிப் புகழாமல் எப்படி இருக்க முடியும்! வாழ்க! காங்கிரஸ் இளைஞர்களே! நீங்கள் நீடூழி வாழ்க! தாய் மொழி மீது நீங்கா பாசம் கொண்ட நல்லவர்களே! நீங்கள் நீடூழி வாழ்க!

சஞ்சீவி ரெட்டிகாரு உங்களிடையே ஆங்கிலத்தில் பேசினார்! "பேசாதே எங்கள் நாட்டில் ஆங்கிலத்தில் பேசாதே! இந்தியில் பேசு, எங்கள் தாய்மொழியில்" பேசு" என்று உங்கள் தலைவரையே எதிர்த்து முழக்கமிட்ட உங்கள் வீரத்தை, உங்கள் தீரத்தை உங்கள் அஞ்சா நெஞ்சத்தை என்னவென்று சொல்வது எப்படித்தான் புகழ்வது.

உங்களைப் போல் இங்கும் தான் காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள்! வெறும் சோற்றுப் பிண்டங்களாக, மாமிச மலைகளாக! பல்லிளித்துப் பல்லிளித்து, அந்நியனிடம் அடி பணிந்து, அடி பணிந்து வீரமற்ற உலர்ந்த மரத் துண்டுகளாகக் கிடக்கிறார்கள்! உங்களுக்குள்ள வீரம் இங்குள்ள காங்கிரஸ்காரர்களுக்கு இல்லையே என்று நினைக்கும் போது உண்மையிலேயே வெட்கப்படத் தான் வேண்டும்!

பாட்னா காங்கிரஸ் இளைஞர்களே! உங்களில் பலர் உங்களையே தூற்றலாம்! "நம்முடைய தலைவரை நாமே வா எதிர்ப்பது—இது முட்டாள் தனம், இது முட்டாள் தனம்" என்று உங்களில் சிலர் கேட்கவும் கூடும்! அதைப்பற்றி துளியும் கவலைப்படாதீர்கள்!

சஞ்சீவி ரெட்டிகாரு உங்கள் தலைவராக இருக்கலாம்! உங்கள் கட்சியைச் சார்ந்தவராகவும் இருக்கலாம்! அதற்காக தாய் மொழியை மறந்துவிட வேண்டுமா? கட்சிக்காக சொந்த மொழியைத் தத்தம் செய்து கொடுத்து விட வேண்டுமா? தேவை இல்லை. ஒருக்காலும் தேவையில்லை!

காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சல்லவா? இந்தி என்ன தான் வளமற்ற மொழியானாலும் இந்தி என்ன தான் சிறப்பில்லாத செத்த மொழியானாலும் அது உங்கள் தாய் மொழி! அது உங்கள் தாய் மொழி!

தாய் நொண்டி என்றால், தாய் முடம் என்றால் தள்ளிவிடுவீர்கள்?" மாட்டோம், நிச்சயமாக மாட்டோம்" என்று உணர்ச்சியற்ற மரக் கட்டைகளுக்கு போதனை செய்ய வந்த உங்களை — மொழிப் பற்றுள்ளவர்கள் எவரும், தாய் நாட்டுப் பாசம் கொண்டவர்கள் அனைவரும் பாராட்டத்தான் செய்வார்கள்!

சஞ்சீவி ரெட்டிகாருவுக்கு தாய் மொழி மீது பாசமில்லை. பற்றில்லை! அதற்காக உங்களுக்கும் கூடாது என்று பொருளா?

மனிதனுக்கு உயிர், மொழி தான் என்பதை ஒரு நாளும் மறவாதீர்கள்!

இனி தென்னாட்டிலிருந்து எந்தத் தலைவர்கள் வந்தாலும் ஆங்கிலத்தில் பேசினால் விரட்டி விரட்டியடியுங்கள்! இந்தியில் தான் பேச வேண்டும் என்று தயவு தாட்சண்யம் இல்லாமல் சொல்லி அனுப்பி விடுங்கள்! அது தான் நீங்கள் பிறந்த மண்ணுக்கும், பேசிவரும் மொழிக்கு செய்யும் கைம்மாறாகும்!

நீங்கள் இப்படிச் செய்தால் தான் எல்லோருக்கும் உணர்ச்சி பிறந்து தாய் மொழி மீது பாசமுண்டாகும்! மறந்த தாய் மொழியை கொஞ்சமாவது நினைத்துப் பாக்க முன் வருவார்கள்!

உங்கள் ஊரில் தென்னாட்டுத் தலைவர் ஆச்சாரியாரை பேச விடாமல் தடுத்தீர்கள்! ஆதனால் தமிழ் நாட்டு மக்களுக்கும் ரோஷம் பிறந்து. உணர்ச்சி பொங்கி ராம்மனோகர் லோகியாவை— "தமிழில் பேசு, இந்தியில் பேசாதே" என்று விரட்டியடித்தார்கள்! ஆச்சாரியாருக்கும், கொஞ்சம் தமிழ் மொழி மீது பாசமுண்டாயிற்று!

அதே போல் — ஆங்கிலத்தில் பேசிய உங்கள் தலைவர் சஞ்சீவி ரெட்டி காருவையும் கூச்சல் போட்டு தடுத்திருக்கிறீர்கள்! நீங்கள் சஞ்சீவி ரெட்டிகாருவை இப்படி செய்ததின் விளைவாகத் தான் அவருக்கும் கொஞ்சம் ரோஷம் பிறந்து விட்டது! சஞ்சீவி ரெட்டி காரு தன்னைப் பற்றி தன் நாட்டைப்பற்றி, தன் மொழியைப் பற்றி தன் இனத்தைப் பற்றி கொஞ்சமாவது சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறார்! பிறந்த பொன்னாட்டைப் பற்றி கொஞ்சம் மனதிலே எண்ணிப் பார்க்க முன் வந்திருக்கிறார்!

திராவிடப் பெரு நாட்டில் பிறந்த சஞ்சீவி ரெட்டிகாரு — பதவிக்காக, அதிகாரத்திற்காக, தன்னை மறந்து—தன்னை மறந்ததோடு அல்லாமல் தன் இனத்தையும் மறந்து- தன் இனத்தையும் மறந்ததோடு அல்லாமல், தன். நாட்டையும் காட்டிக் கொடுத்து தன்மானம் இல்லாமல் வாழ்ந்து வருகிறார்! அத்தோடு உங்கள் உணர்ச்சியைக் நசுக்கவும், உங்கள் எழுச்சியைக் கட்டுப்படுத்தவும் முன் வருகிறார்!

"இப்படிக் கூச்சல் போட்டால்—இந்தியில் தான் பேச வேண்டும் என்று வற்புறுத்தினால்—இந்தியா பிரிந்து விடும், உடைந்து விடும், சிதைந்து விடும்" என்று மிரட்டுகிறார். உங்களை 'உருட்டுகிறார்! அந்த மிரட்டலுக்கும், உருட்டலுக்கும் நீங்கள் கொஞ்சமும் அஞ்சாதீர்கள்!

"இந்தியா பிரிந்து விடும்" என்று சொன்னால் — பிரியட்டுமே—உங்களுக்கு சொந்தநாடு வேண்டாமா? சொந்த மொழி வேண்டாமா?" என்று கேளுங்கள்!

சஞ்சீவி ரெட்டிகாரு உங்களை "இந்தி வெறியர்கள்" என்று சாடுகிறார்! அதை ஒப்புக் கொள்ளுங்கள்! "தாய் மொழி மீது வெறி கொள்வது தவறில்லை" என்று சொல்லுங்கள்! "உங்களுக்கு அந்த வெறியில்லை என்றால் எங்களுக்கும் கூடாதா" என்று கேளுங்கள்! அப்போதாவது இவர்களுக்கு சொந்த மொழி மீது பாசமும், நேசமும், பற்றும் உண்டாகிறதா என்று பார்ப்போம்!

நீங்கள் அங்கு வரும் பெரும் பெரும் தலைவர்களுக்கு இப்படி பாடம் கற்பித்தால் தான் அவர்களும் பாடம் பெறுவார்கள்! உங்களைப் போல் மொழிப் பற்றும். நாட்டுப் பற்றும் கொண்டு மனிதர்களாக வாழ்வார்கள்! தென்னாட்டுத் தலைவர்கள் அனைவரும் உணர்ச்சி பெற்று மனிதர்களாக வாழ இதை தொடர்ந்து செய்யுங்கள்! தொடர்ந்து செய்யுங்கள்!

உணர்ச்சியற்ற மரக்கட்டைகளாக வாழும் தென்னாட்டுக் காங்கிரஸ் இளைஞர்களே! தென்னகத்தில் இந்தியை எதிர்த்தால் குண்டாந் தடிகளைத் தூக்கி மண்டையைப் பிளக்க வரும் காந்தி சீடர்களே! பாட்னா காங்

(9-ம் பக்கம் பார்க்க)

போராட்டத்தில் குதிப்பேன்!
ரத்த வெள்ளத்தில் மிதப்பேன்!
உயிர் தியாகம் செய்வேன்!

ஆகஸ்டு 30 ம் தேதியோடு படப்பிடிப்பை முடித்துக் கொள்வேன்!

கோழைகளுக்கு இனி இங்கு இடமில்லை!
எல்லோரும் வீரர்களாகப் புறப்படுங்கள்!
புரட்சி நடிகரின் பொறி பறக்கும் பேச்சு!

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் சென்னி மலையிலும், சென்னையிலும் முழங்கிய போர் முழக்கம் வருமாறு :—

அன்புள்ள தோழர்களே! தாய்மார்களே! பெரியோர்களே! நண்பர்களே!

இந்தியை எதிர்த்து ஆகஸ்ட்டு 31ம் தேதி ஒரு மாபெரும் போராட்டத்தை நடத்துவதென நமது கழகத்தின் பொதுக் குழு குமாரபாளையத்தில் முடிவு செய்து போர்க் கொடியை உயர்த்திவிட்டது.

அந்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு நான் முடிவு செய்து அதற்கான காரியங்களைச் செய்து வருகிறேன்.

நம்முடைய நாட்டின் மீதும் மொழியின் மீதும் பற்றுள்ள அனைவரும் இதில் ஈடுபட்டு, நமது மொழியைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தி இந்த நாட்டில் புகுந்து ஆட்சி மொழியானால் நமது தமிழ் மொழி அழிந்து ஒழிந்து விடும், தாய் மொழி அழிந்தால் நாம் வடநாட்டுக்காரனுக்கு அடிமையாக வேண்டிய நிலை ஏற்படும். அப்படிப்பட்ட நிலையைப் போக்கவே நமது கழகம் இன்று இந்தியை எதிர்த்து போரிட முன் வந்திருக்கிறது.

நான் இந்த போராட்டத்தில் ஈடுபட்டு அதனால் ஏற்படும் எந்தவித இன்னல்களை ஏற்கவும் தயாராகி விட்டேன்.

அதனால் என்னை போலீசார் தடி கொண்டு தாக்கி இம்சிக்கலாம் துப்பாக்கிக் குண்டுகளை என் மீது பொழியலாம், கடும் தண்டனைக்கு உட்படுத்தலாம், சிறையில் தள்ளி கொடுமைப் படுத்தலாம் இதையெல்லாம் நான் எதிர்பார்த்தே இந்தப் போரில் ஈடுபடுகிறேன். இரத்த வெள்ளத்தில் மிதக்கவும் தயாராக இருக்கிறேன்.

இந்த அடக்கு முறைகளையெல்லாம் வரவேற்றே நான் இந்தப் போராட்டத்தில் இறங்குகிறேன்.

என்னை அடிக்கின்ற—இம்சிக்கின்ற போலீசார் மீதோ, அதிகாரிகள் மீதோ, நான் கோபப் படமாட்டேன்.

போலீசாரோ, அதிகாரிகளோ தாங்களாக எதுவும் செய்வதில்லை.

இந்த மாநிலத்தை ஆளுகின்ற அமைச்சர்களின் ஆணைகளுக்குட்பட்டே அதைச் செய்கிறார்கள்.

நான் இங்கிருக்கின்ற அமைச்சர்களின் மீதும் வருத்தப்படமாட்டேன். அவர்கள் நிலையைக் கண்டு பரிதாபப்படத்தான் செய்வேன்.

இன்று அமைச்சர்கள் ஆணையிடுகிறார்களென்றால் அவர்கள் தங்கள் சொந்த முறையோ, அவர்களுக்கிருக்கும் அதிகாரத்தாலோ, ஆணையிடுவதில்லை.

டில்லி அரசாங்கம் இடும் கட்டளைகளின்படி ஆடுகின்றவர்களாக அவர்களின் ஆணையை நிறைவேற்றுபவர்களாகத்தான் இங்குள்ள அமைச்சர்கள் இருந்து வருகிறார்கள்.

அவர்களுடைய நிலை இன்று டில்லியிலுள்ள வடநாட்டானுக்குக் காட்டிக் கொடுக்க வேண்டிய அவலநிலை அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே நாம் இங்குள்ள எவர் மீதும் கோபப்பட வேண்டியதில்லை. நமது கடமையை நாம் செய்வோம் வரும் இன்னலை ஏற்போம்.

இன்று இங்குள்ள அமைச்சர்கள் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்ளத் தகுதியற்றவர்கள். அவர்கள் டில்லியிலுள்ள வட நாட்டார்களுக்கு அடிமைகளாக—வால் பிடித்துத் திரிபவர்களாக இருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் இருக்கும் வரை நமது நாடு முன்னேற முடியாது, நமது மொழி முன்னேற முடியாது. ஆதலால் தமிழர்களனைவரும் ஒன்று பட்டு இந்த போரில் ஈடுபட முன்வர வேண்டும்.

இந்த விடுதலைப் போரில் தமிழ் பற்றும், நாட்டுப் பற்றும் கொண்ட கலைஞர்கள் பங்கு கொள்ள முன் வந்திருக்கிறார்கள் மீதமுள்ள கலைஞர்களும் தயாராக வேண்டும்.

இந்தப் போரில் ஈடுபடும் நானோ, மற்றவர்களோ, திரும்பி வருவோம் என்று கூற முடியாது. நாங்கள் இரத்த வெள்ளத்தில் மிதக்க நேரிட்டாலும் நேரிடலாம் இன்றுள்ள பலர் இந்தப் போராட்டத்தால் இல்லாமற் போனாலும் போகலாம். இந்த மாதிரி நேரங்களில் நீங்களெல்லாம் அமைதியான முறையில் உங்கள் கடமைகளை ஆற்ற முன் வர வேண்டும்.

இந்த நாட்டிலுள்ள தாய்மார்களும், பெரியவர்களும், மற்றவர்களும் தியாகிகளாக மாற வேண்டும். மொழியைக் காக்கும் வீரர்களாகத் திகழ வேண்டும்!

தன்மானமுள்ள தமிழர்களெல்லாம் இந்தப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் நானும் தயாராகி விட்டேன்.

இந்தியை நாம் தெரிந்தோ, தெரியாமலோ இந்த நாட்டில் வர அனுமதித்திருக்கிறோம். இந்தி

(10-ம் பக்கம் பார்க்க)

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கிரஸ் இளைஞர்களுக்கு இருக்கிற உணர்ச்சி உங்களுக்கு ஏனில்லை!

அவர்களும் காந்தி சீடர்கள் தான், அவர்களும் ஆசியாவின் ஜோதி, அகிலம் புகழும் நேருவின் சிஷ்யர்கள் தான் அவர்களுக்குள்ள மானம், ரோஷம் உங்களுக்கு இல்லாத காரணம் என்ன? உங்களுக்கு எப்போதுமே அந்த உணர்ச்சி வரவே வராதா?

பாட்னா இளைஞர் காங்கிரஸ் வீரர்கள் உங்களைக் கண்டு சிரிக்கிறார்கள்! உங்கள் அடிமைத் தனத்தைப் பார்த்து காட்டிக் கொடுக்கும் புத்தியைப் பார்த்து கங்காணி வேலை செய்யும் இழி செயலைப் பார்த்து வாய்விட்டு சிரிக்கிறார்கள்!

யார் தடுத்தாலும், எவர் சொன்னாலும் எங்கள் தாய் மொழி பாசத்தை அழிக்க முடியாது—நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று முழக்கம் செய்யும் பாட்னா வீரர்களைப் பார்த்தாவது நல்லறிவு பெறுவிட்டால், நாட்டுப்பற்று கொள்ளா விட்டால்—பாட்னா காங்கிரஸ் இளைஞர்கள் உங்களை மனிதர்களாக மதிக்கமாட்டார்கள், காட்டில் வாழும் மிருகங்களாகத் தான் மதிப்பார்கள்!

தென்னாட்டு சிங்கமே! சஞ்சீவி ரெட்டியே! இந்தியா பிரியாது, பிரிக்க முடியாது என்று இன்னும் நப்பாசைக் கொள்ளுகிறீரா? "இந்தி தான் பொது மொழி" என்று இன்னும் மனமார ஒப்புக் கொள்ளுகிறீரா? "இந்தியா ஒரே நாடு தான்" என்ற எண்ணம் இன்னமும் உம்முடைய மனதில் அரும்பி, பூத்து, காய்த்து, பழுத்து குலுங்கி நிற்கிறதா? பதில் சொல்லும்! எங்கள் அமைச்சர்களைக் கேட்கவில்லை! எங்கள் அமைச்சர்களுக்கு மொழி என்றால் புரியாது, நாடு என்றால் தெரியாது! அவர்களைக் கேட்டு பயனுமில்லை! உம்முடைய முடிவு தான் என்ன? இன்னும் பல பாட்னா சம்பவங்களைப் பார்த்தப் பிறகு சொல்லப் போகிறீர்களா? அல்லது பாட்னா காங்கிரஸ் இளைஞர்களைப் போல் மொழிப் பற்றும், இனப்பற்றும், நாட்டுப் பற்றும் கொண்டு தனி நாடு கேட்கப் போகிறீர்களா? விரைவில் உங்கள் முடிவை சொல்லுங்கள்! காலதாமதமானால்—நாளை துரோகப் பட்டியலில் சேர நேரிடும்!

●

(முதல் பக்கத் தொடர்ச்சி)

சிவாஜி கணேசனுக்கு கிடைக்க வேண்டிய பேரும், புகழும், செல்வமும் கிடைத்து விட்டது! இனி அவருக்கு ஏதும் தேவையில்லை! இனி அவர் நாட்டிற்காகத் தான் இருக்க வேண்டும்! நாட்டுப் பணிக்காகத் தான் வாழ வேண்டும்!

"கலையும், அரசியலும், நட்பும் வேறு வேறு" என்ற வேதாந்தம் இனியும் செல்லாது!

அரசியலுக்கு ஆபத்து என்றால் அது கலைக்கும் ஆபத்தாகும் அதே போல் கலைக்கு ஆபத்து என்றால் அது அரசியலுக்கும் ஆபத்தாகும்!

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இதனை நன்கு உணர்ந்தவர் என்பதை நாமறிவோம்! எனவே அவர் நாடு விடுதலைப் போராட்டத்தில்—இந்தச் சொல் பிடிக்காவிட்டால் மொழிப் போராட்டத்தில் கலந்து கொள்ளத்தான் வேண்டும்! இனியும் அவர் ஒதுங்கி நிற்பது கூடாது! அது நாட்டிற்கும், அவருக்குமே பெரும் நஷ்டமாகும்!

போராட்டக் குழுத் தலைவர் சம்பத் அவர்களுடைய சந்திப்பு இந்த சிறப்பான நிலையை கணேசனுக்கு ஏற்படுத்தித் தரும் என்றே நம்புகிறோம்!

(அண்ணா பேச்சு)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கை நடத்தலாம் என்று வந்தார்கள்.

இன்று நமது தமிழ் நாட்டில் இருப்பதைப் போல் வட நாட்டிலிருந்து வந்து பம்பாயிலிருந்து வந்த சௌகார் பேட்டையிலிருக்கும் மார்வாடிகளை ஒப்பிட்டு பாருங்கள். இந்த விஷயத்தை நீங்கள் உவமைக்காக மட்டும் வைத்துக் கொள்ளுங்கள் வேறு எதற்கும் பயன்படுத்திக் கொள்ளாதீர்கள்.

நான் பத்தாண்டுகளுக்கு முன் ஹௌகத்திக்குச் சென்றிருந்தேன். அங்கு கல்லூரி பேராசியர் ஒருவரைக் காணச் சென்றிருந்தேன்.

அங்குள்ள கல்லூரி மாலை ஐந்து மணிக்குக் கலைந்தது. மாணவர்கள் வெளியில் வந்தார்கள்.

சுமார் 500 மாணவர்கள் வந்ததில் 300 பேர்கள் வங்காளிகள், 200 பேர்கள் அசாமிகள் இருந்தார்கள், இதைப் பார்த்ததும் எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு வங்காளிகள் அசாமுக்கு எப்படி வந்தார்கள் என்று அன்று யோசித்தேன்.

பத்துக் கடைகள் இருந்தால் ஆறு கடைகள் வங்காளிகள் கடைகள், நான்கு கடைகள் தான் அசாமியர்கள் கடைகள்

(எம். ஜி. ஆர். பேச்சு)

(9ம் பக்கத் தொடர்ச்சி)

யை வடநாட்டு ஏகாதிபத்திய வெறியர்கள் பலவந்தமாக நம் மீது திணிக்க ஆரம்பித்து விட்டார்கள். நாணயத்திலும் இந்தி புகுந்து விட்டது.

நமது அண்ணா அவர்கள் வீட்டுக்கொருவர் வந்து நாட்டுமொழியைக் காக்க போராட்டத்தில் சேர ஆணையிடுகிறார்.

அதன்படி எங்கள் குடும்பத்திற்கு "எனது தம்பி இராமச்சந்திரனை இந்தப் போராட்டத்திற்கு அனுப்புகிறேன்" என்று எனது அண்ணன் பெரு மகிழ்ச்சியோடு அறிவித்து விட்டார்.

எங்கள் வீட்டிலுள்ளோர் அனைவரும் இந்தச் செய்தியைக் கேட்டு ஆனந்தம் கொள்கிறார்கள்.

நான் இந்தப் போராட்டத்தில ஈடுபட்டு, கொடுமையான அடக்கு முறைக்குட்பட நான் முடிவு செய்து விட்டேன்,

ஆகஸ்டு 31க்குப் பின் நான் இரத்த வெள்ளத்தில் மிதப்பேன். துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாவேன்.

என்னுடைய படத்தொழில் சம்பந்தப்பட்ட வரை 31ம் தேதிக்குள் முடிக்கத்திட்ட மிட்டு விட்டேன். அப்படி முடியா விட்டாலும் அதோடு நிறுத்தி விட்டு போர்க்களத்திற்குப் போவேன்.

ஆகஸ்ட் 31க்கு பின் இந்த "இராமச்சந்திரனை கோடம்பாக்கம் ஸ்டுடியோக்களில் பார்க்க முடியாது. கொடுமையாளர்களின் துப்பாக்கி முன் தான் பார்க்கலாம் என கூறி விடைபெறுகிறேன்.

எந்த வகையிலும் வங்காளிகள் தான் வசதிகளோடும், நல்ல வாழ்வோடும் வாழ்ந்து வந்தார்கள்.

இந்த நிலை அசாமியர்களின் மனதில் பதிய ஆரம்பித்தது. இது அவர்களுக்கு கேள்விக் குறியாக இருந்து வந்தது.

இந்த நாட்டில் நாம் பிறந்தோம், இங்கு வளர்ந்தோம் நம்மை விட இங்கு பிழைக்க வந்த வங்காளிகள் நல்ல வாழ்வு வாழ்கிறார்களே நாம் ஏன் வாழ முடியவில்லை என்று எண்ணலாயினர் இந்த எண்ணம் நாளுக்கு நாள் வலுப்பெற்று அவர்களது உள்ளத்தில் உரம் பெறலாயிற்று.

இன்று சௌகார் பேட்டைக்கு நீங்கள் போய் அங்குள்ள மாளிகைகளையும். கேட்டுகளையும். அவர்கள் வாழுகின்ற வசதிகளையும் பார்க்கும் போது உங்கள் மனதில் என்ன தோன்றும்?

நம் தோழர் ரிக்ஷா வண்டியை இழுக்கிறார் சௌகார் பேட்டையிலுள்ள மார்வாடி அந்த வண்டியில் ஏறிக் கொண்டு போய் ஆறணா கொடுத்தால் அந்த ரிக்ஷா இழுக்கும் நம் தோழர் என்ன நினைப்பார்.

"இவன் ஆயிரம் மைல்களுக்கப்பால் பிறந்தவன், நாமோ இங்கு பிறந்தோம், வளர்ந்தோம். நாம் வண்டி இழுக்க வேண்டி யிருக்கிறது. அவன் மேலே ஏறி உட்கார்ந்து செல்கிறான். இந்த நாட்டில் பிழைக்க வந்தவன் உயர்ந்திருக்கிறான், நாட்டிற்கு சொந்தக்காரனாகிய நான் தாழ்ந்திருக்கிறேன். இந்த நிலை எப்படி வந்தது என்று யோசிக்க மாட்டானா? பின் ஆண்டவனே உனக்குக் கண்ணில்லையா, என் நிலை இப்படித் தான் இருக்க வேண்டுமா என்று வருந்தி தனக்குக் கிடைக்கும் ஆறணாவில் தேங்காய் வாங்கி சூறை தேங்காய் உடைப்பான்.

அப்படித் தேங்காய் உடைத்தும் பிள்ளையார் அருள் கிடைக்காவிட்டால் அந்த ரிக்ஷா இழுக்கும் தோழர் என்ன எண்ணுவார். இந்த நாட்டிலிருந்து இவர்களை ஏன் விரட்டியடிக்கக் கூடாது என்று எண்ணுவான் அதற்குப் பின் செயலில் செய்ய நினைப்பான். அப்படிப்பட்டவர்கள் தான் நமது முன்னேற்றக் கழகக் கூட்டங்களுக்கு வந்து ஓரங்களில் நின்று நாம் பேசுவதை கேட்டு நம் கொள்கைகளை அறிந்து கொள்கிறார்கள். பின் அதிலிருக்கும் நீதிகளை உணர்ந்து பின்பற்றுகிறார்கள்.

இன்று அசாமில் இது தான் நடக்கிறது. அந்த உணர்ச்சி தான் அங்கு ஏற்பட்டிருக்கிறது. "அசாம் முதலமைச்சர், அசாம் மாநிலத்தில் அசாம் மொழி தான் ஆட்சி மொழியாக இருக்குமென்ற அறிவித்து சட்டத்தையும் நிறைவேற்றினார்.

இதை வங்காளிகள் எதிர்த்தார்கள்.

நம்முடைய மாநில கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் இந்த மாநிலத்தில் " தமிழ்தான்

மதமும் கடவுளும் மொழி உணர்ச்சியைக் கட்டுப்படுத்தாது!

அஸ்சாம் சொல்லும் பாடம் இது தான்

ஆட்சி மொழியாக இருக்கும், கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் தமிழ்தான் போதனா மொழியாக இருக்கும். சர்க்கார் அலுவலகங்களிலும் தமிழ்தான் ஆட்சி மொழியாக இருக்கும் என்று அறிவித்தார். ஆனால் அதை பிறமொழி பேசுவோர் தடுக்கவில்லை. வங்காளிகள் மட்டும் "அசாம் மொழி, ஆட்சி மொழியாவதை வங்காளிகள் தான் தடுக்கிறார்கள்.

வங்காளிகள் எதிர்ப்புபற்றிய விளக்கங்களை இன்னொரு கூட்டத்தில் விளக்குகிறேன்.

இன்று அசாமியர்கள் என்ன கேட்கிறார்கள் "எங்கள் மொழி ஆட்சி மொழி ஆவதை தடுக்க இவர்கள் யார்? எங்கள்நாட்டில் வந்து எங்கள் மொழியையேத் தடுக்க இவர்கள் யார்?"

இந்த எண்ணம் பரவியதால் தான் அங்கு அமளி ஏற்பட்டிருக்கிறது!

இந்த நிலை இங்கும் ஏற்படாமலா போய் விடும், சௌகார் பேட்டையிலிருக்கும் மார்வாடிகளை இங்குள்ளவன் ஒரு நாள் அசாமியனைப் போல் கேட்கத் தான் போகிறான்.

நீ யார் இங்கு வந்து இவ்வளவு நல்ல நிலைமையில் இருப்பதற்கு? சபல்பூரிலிருந்து வந்த உனக்கு இந்த வாழ்வு எப்படி வந்தது. ஏன் எங்கள் நாட்டிற்கு வந்தாய் என்று ஒரு நாள் இந்த நாட்டிலிருந்து கேட்கு உணர்ச்சி நிலைமை வரத் தான் போகிறது.

அப்படி வரும் போது எந்த ராணுவத்தைக் கொண்டும் அந்த உணர்ச்சியை அடக்கி விட முடியாது.

ஆகையினால் தான் நாம் நமது திராவிட நாட்டைப் பிரித்துக் கொடுக்க வேண்டும், நாம் நம் நாட்டை ஆள வேண்டும் என்று கேட்கிறோம்.

திராவிடநாடு பிரிந்து விட்டால் வேறு நாட்டிலிருந்து யார் வந்தாலு அவர்களை சோதனையிட்டே அனுமதிக்கப்படும்.

திராவிடநாடு பிரிந்தால் இந்த நாட்டிற்குள் கண்டவன் நுழைய முடியாது, எங்கிருந்தோ வந்தவனெல்லாம் சுரண்டிக் கொண்டு போக முடியாது. அதனால்தான் நமது நாடு நமக்கு வேண்டுமென்று கேட்கிறோம் இதை ஆட்சியாளர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்று அரசியல் நர்கரீகம் வளர்ந்து, மிகக் கண்ணியமோடு உரிமைக்குப் பாடுபட்டு வருகிறோம்.

நான் இந்தக் கூட்டத்தில் கேட்க விரும்புகிறேன் சிதம்பரம் ஜெயராமன் பாடியிருப்பது போன்று" எது வேண்டும் சொல் மனமே" என்ற பாடல் படி "அசாம் வேண்டுமா, அரசியல் நாகரீகம் வேண்டுமா என்பதை அமைச்சர்களே தான் முடிவு செய்து கொள்ள வேண்டும் நான் என்றும் அசாமை விரும்ப மாட்டேன். ஆனால் என்றுமே மக்களிடம் அமைதியை நிலை நாட்டி விட முடியாது. உணர்ச்சியை அடக்கிக் கொண்டிருக்க முடியாது.

நான் என்னுடைய தோழர்களுக்கு ஒரு அளவுக்குத் தான் சமாதானத்தை சொல்லிக் கொண்டிருக்க முடியுமே தவிர என்னையும் மீறி மக்கள் "இந்த அண்ணாவை கொஞ்ச காலத்திற்கு ஒதுக்கி வைத்து விட வேண்டுமென்று நினைத்து விட்டால் நிலைமை என்ன ஆகும்.

இந்த நாட்டில் ஆட்சிமொழியாக இந்தியைக் கொண்டுவர ஆட்சியாளர்கள் எண்ணுகிறார்கள். தமிழகத்திலுள்ள நாம் அதை எதிர்க்கிறோம். அசாமில் நடப்பது போன்று அவ்வளவு வலுவாக நம் எதிர்ப்பு நடக்கவில்லை.

உத்தியோகங்களில் உயர்வு பெறுவதற்கும் சம்பளங்கள் உயர்வதற்கும் இந்தி படித்தால் தான் அவர்களுக்கு இந்த சலுகைகள் கிடைக்கும்.

நான் இனி உங்களை அடிக்கடி சந்திக்க முடியாது. கொடுக்க வேண்டிய பயிற்சிகளைக் கொடுத்து விட்டேன் சொல்ல வேண்டிய அறவுறைகளைச் சொல்லி விட்டேன். இனி நீங்கள் அதன் படி நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்!

நாம் இந்த நாட்டிலுள்ள எந்த பிரச்சினைப் பற்றி கூறினாலும் பண்டித நேருவும் அவரைச் சார்ந்தவர்களும், இந்திய எல்லையில் சைனாக்காரன் இருக்கிறான்; இந்த நேரத்தில் இந்த பிரச்சனைகளைப் பற்றி கூறுகிறீர்களே என்று மழுப்புகிறார்கள்.

நான் பண்டித நேருவுக்கு கூற ஆசைப்படுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் எல்லைக்காக்க தயார். ஆனால் முதலில் எங்கள் பிரச்சனையைத் தீர்க்க ஆட்சியாளர்கள் ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று கூறி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

வணக்கம்.

★

எங்கள் சுவரொட்டியைத் தடுத்தால் நானே தட்டியைத் தூக்கிச் செல்வேன் !

பேச்சுரிமையைத் தடுத்த எந்த அரசாங்கமும் நீடித்ததில்லை - நிலைத்ததில்லை !

மக்களுக்காக அமைச்சர்களா ? அமைச்சர்களுக்காக மக்களா ?

பொதுச் செயலாளர் விடும் எச்சரிக்கை

சென்னை 79 வது வட்டம் ரோட்டரி நகர் எம். ஜி. ஆர். படிப்பகத்தின் இரண்டாம் ஆண்டு விழா 4-7-60 ம் நாள் மாலை தோழர் **C. M.** முத்துகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது

தோழர்கள் அரசுதாசன், அரங்கநாதன், நகர மன்ற உறுப்பினர் சிட்டி பாபு ஆகியோர்கள் வருகின்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப்பறறிப் பேசினர்கள்

பின் பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நீணட கை ஒலிகளுக் கிடையே பேசியதாவது :-

அன்புள்ள அவைத் தலைவர் அவர்களே! மதிப்பிற்குரிய பெரியோர்களே! தோழர்களே! நண்பர்களே! தொழிலாளத்தோழர்களே! பட்டாளிமக்களே!

இன்று இந்தக் கூட்டத்தில்கலந்து பேசும் வாய்புக் கிடைத்தமைக்கும், உங்களை யெல்லாம் கண்டு என்னுடைய அபிப்பிராயத்தைக் கூறுவதற்கும் வாய்ப்பளித்த இந்த மன்றத்தாருக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்

இந்த மன்றம் திராவிட முன்னேற்றக் சழகத்தின் துணைச்சார்பு மன்றம் இந்தமன்றம்கடந்த இரண்டாண்டுகளாக நமது கழகத்தின் கொள்கைகளை இந்தப்பகுதி மக்களிடையே பரப்பி நல்லபணிகளைச் செய்து வருகிறது. கடந்த இரண்டாண்டுகளாக இந்த மன்றம் பல இன்னல்களிடையேயும், பல எதிர்ப்புகளுக்கிடையேயும் அதன் பணிகளை ஆற்றி வருவதைக் கண்டு நான் மகிழ்வதுடன், அதற்காக இந்த மன்றத்தோழர்களைப்பாராட்டுகிறேன்

நம்முடைய நாட்டில் நடைபெற்று வரும் இந்த ஆட்சியின் போக்கையும், அதன் நிலையையும் நோக்கும் போது இது மக்களின் தன்மையையும் நல்லெண்ணத்தையும் கொண்டு ஆட்சிபுரிய எண்ண வில்லை

எந்த அளவுக்கு அடக்குமுறையையும், அதிகாரபலத்தையும் நம்பிக்கொண்டு ஆட்சி புரிந்து வருகிற தென்பதை இன்று அது நடந்து வரும் போக்கிலிருந்து கண்டு கொள்ளலாம்

இன்று இந்த கூட்டம் எந்த நிலையில் நடை பெறுகிறது எந்தவித தொல்லைகளை இந்தக் கூட்டம் தாங்கி இருக்கிறது என்பதை நான் கேள்விப்படும்போது இந்த அரசாங்கம் ஆணவமும் அதிகார வெறியும் கொண்டு ஆட்சி செலுத்தி வருகிறது என்பதை நன்கு அறிந்து கொள்ளலாம்

இன்று இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு ஜனநாயக முறைப்படி எந்தவித உரிமையும். சுதந்திரமும் கிடையாது

இங்கு இன்று பேச்சுரிமை கிடையாது மக்களுக்குப் பேச்சைக் கேட்கும் உரிமையும் கிடையாது

பொதுக் கூட்டம் நடைபெறுவதற்கு நிர்பந்தங்கள் பேச்சுக்களை ஒலிபரப்புகின்ற குழாய்கள் வைப்பதற்கு நிர்பந்தங்கள கூட்ட நேரங்களில் நிர்பந்தங்கள் இம்மாதிரியான தடை விதித்து மக்களின் எண்ணத்திற்கு - மக்களின் சுதந்திரத்திற்கு தடை விதித்து வருகிருர்கள்

முன்பெல்லாம் ஆறு குழய்கள் நான்கு குழாய்கள் வைக்கப்பட்டு வந்தது இன்று இரண்டு குழாய்கள் தான் வைக்க வேண்டும் கூட்டங்கள் இன்னின்ன இடங்களில்தான் நடத்தவேண்டும்இன்ன நேரம் வரை தான் தடத்த வேண்டுமென்று தடைவிதித்து மக்கள் உணர்ச்சியை அடக்கப் பார்க்கிருர்கள்

'*மக்கள் பேச்சைக் கேட்கும் உரிமை பெற்றவர்களல்லர்*''

''*மக்கள் 10 மணி வரை பேச்சு கேட்கும் சுதந்திரம் பெற்றவர்களல்லர்*''

''*மககள் 6 குழாய்களின் மூலம் பேச்சுக்களைக் கேட்கும் உரிமையு டயவர்களல்லர்*''

இம்மாதிரியான உரிமைகளைப் பெறும் வாய்ப்பினை இந்த நாட்டு மக்களுக்கு இந்த ஆட்சியாளர் நல்கவில்லை என்பதை அறிவித்து விடவேண்டும்!

இன்ற இங்குள் ஆளுகின்ற ஆட்சியினர் மக்களை நம்பி ஆட்சி செய்யவல்லை சட்டத்தை நம்பித்தான் அதிகாரத்தை நம்பிதான் ஆட்சி செய்கருர்கள்

சட்டம் மக்களுக்காக இருககவேண்டுமே யொழிய சட்டத்துக்காக மக்கள் இருக்க வேண்டியதில்லை

சட்டம் மக்களின் பாதுகாப்பிற்காக-மக்களின் நலனிற்காகஇருக்கவேண்டுமே யொழிய மக்களுக்குத் தொல்லை கொடுக்கும் படியாகவோ மக்களின் உரிமைகளை பறிக்கும் படியாகவோ இருக்கக் கூடாது ஆட்சியாளர்களின் வசதிக் கேற்றவாறு சட்டங்களை அமைப்பது ஜனநாயக மாகாது

அமைச்சர்கள் மக்களுக்காக இருக்கிருர்களே தவிர அமைச்சர்களுக்காக மக்களல்ல

இன்று அமைச்சர்களாக இருக்கின்ற உங்கள் பதவியைப் பாதுகாக்க மக்கள் இருக்கவேண்டுமென்று கருதுகிறீர்களா?

ஒரு ஆட்சி மக்களுக்கு நன்மை உண்டாகும் வகையில் சட்டமியற்றவேண்டும்

அந்த சட்டத்தை மக்களின் தேவைக்கான வகையில் நிறைவேற்ற அமைச்சர்கள் பாடுபட வேண்டும் சட்டத்தை ஆட்சி பீடத்திலிருப்பவர்களின் வசதிக் கேற்றவாறு அமைத்துக் கொள்ளக் கூடாது

இன்று அமைச்சர்கள் என்ன நினைக்கிருர்களென்ருல்,

''நான் ஆட்சி பீடத்திலிருக்கிறேன் சட்டத்தைச் செய்வது நான் அதை நிறை வேற்ற போலீஸ் அதிகாரிகள் இருக்கிருர்கள்''

என்று நினைத்துக் கொண்டிருந்தால் - பேசிக் கொண்டிருந்தால் இது ஜன நாயக மாகாது

சட்டத்தை வைத்து இன்று போலீஸ் அதிகாரிகள் கூட்டங்களுக்குத் தடை விதிப்பதாக என்னிடம் கூறப்பட்டது

இன்று நாட்டிலுள்ள நிலமைகளைப் பார்த்து போலீஸ் அதிகாரிகளை நொந்து கொள்வதில் பயனில்லை அவர்கள் மீது வருத்தம் கொள்வதில அர்த்தமில்லை அவர்கள் மீது கோபப்படுவதில் நியாயமில்லை.

இன்று போலீசார் அம்புகளாக இருக்கிருர்கள், அம்புகள் எவர்கள் மீதும் பாயும். நல்லவர்களென்ரே, கெட்டவர்களென்ரே, யார் மீது பாயலாம், எவர் மீது

(12-ம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in CEYLON
Regd. No.M. 7074 MALAIMANI விலை 16 காசு Phone 83285
இலங்கையில் 20 சதம்

தூங்கும் புலியை இடறிய குருடராகாதீர்கள்!

மக்கள் என்றும் பூனைகளாக இருக்கமாட்டார்கள்!

(நெடுஞ்செழியன் பேச்சு)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

.... பாயக் கூடாதென்று அம்புக்குத் தெரியாது. அம்பை எய்துகின்றவனின் நோக்கப்படி, அவனுக்கிருக்கும் பண்பின்படி தான் பாயும்

ஆகவே போலீசார் ஆட்சியாளர்களின் எண்ணப்படி, ஆணைப்படி நடப்பவர்கள் நாம் அவர்கள் மீது கோபப்படக் கூடாது.

இன்று ஆட்சியினர் கூட்டம் நடக்கும் நேரத்தையும் கட்டுப்படுத்தி 10 மணி என்றிருந்ததை 9 மணி வரை தான் கூட்டங்கள் நடத்த வேண்டுமென்று ஆணையிடுகிறார்கள்.

இதைக் கண்டு நமது தோழர்கள் தினமும் என்னிடம் வேதனைப் பட்டுக் கூறி வருகிறார்கள்.

10 மணி வரை கூட்டம் நடைபெற்றால் என்ன கெட்டுவிடும், நாட்டில் நடப்பதை நாட்டு மக்கள் அறியக் கூடாதென்று ஆட்சியாளர்கள் எண்ணுகிறார்களா?

மக்களைப் பரந்த இடங்களில் கூட்டி அவர்களுக்கு இன்றைய அரசியலை விளக்கிக் கூறி வருகிறோம். மக்கள் படும் தொல்லைகளை விளக்கி அதைக் களைவதற்கான வழியைக் கூறிவருகிறோம். இது தவறா?

ஆட்சியாளர்கள் கூறுகிறார்களே, மக்களிடம் 9 மணி வரை தான் பேச வேண்டும், பேச்சைக் கேட்பதற்கு இரண்டு குழாய்கள் வைக்க வேண்டும். என்று இதை என்ன ஆட்சி என்று கூறுவது.

அதிகாரிகளைக் கேட்டால் நாங் என்ன செய்வது மேலே இருந்து வரும் உத்திரவுப் படி தான் நடக்கிறோம் என்று கூறுகிறார்கள்.

மக்களின் பாதுகாப்பிற்கும், அவர்களுக்கு நன்மை செய்வதற்கும் தான் ஒரு அரசு அமைகிறதே தவிர, அவர்களுக்குத் தொல்லை கொடுப்பதற்கல்ல— இதை ஆட்சியாளர்கள் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்று மக்கள் விழிப்புணர்ச்சி பெற்று விட்டார்கள். மக்கள் அறியும் சக்தியைப் பெற்று விட்டார்கள். கூட்டங்களுக்குச் சென்றால் அறிவு விளக்கம் பெறுகிறார்கள். ஆகவே கூட்டங்களுக்கு நிர்பந்தங்கள் ஏற்படுத்தி தடைப்படுத்தலாம் என்று திட்டம் போடுகிறார்கள்.

சட்டங்களை மீறி காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நினைப்பவர்களல்ல நாம் சட்டத்தை மீற வேண்டுமென்று நாம் தீர்மானித்தால் முன் அறிவிப்பு கொடுத்து விட்டே மீறுவோம்.

நாம் எந்தக் காரியத்தையும் சட்டத்தை மீறித் தான் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டவர்களல்ல. எதையும் சமாதான முறையில செய்ய வேண்டுமென்று நினைப்பவர்கள்!

நான் கூட சில தினங்களுக்கு முன் நமது நண்பர்கள் நடராசன். கருணாநிதி, சத்தியவாணிமுத்து ஆகியவர்களுடன் பெரிய போலீஸ் அதிகாரியைச் சந்தித்தேன். நகரில் நடைபெற்று வரும் குழப்பங்களைப் பற்றியும், அரசியல் கூட்டங்களில் நடந்து வருகின்ற கண்யமற்ற முறைகளைப் பற்றியும் பலாத்காரச் செயல்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தோம். இன்று சென்னை நகரில் அமைதிக்குப் பங்கம் வரும்வகையில் அரசியலின் பேரால் நடந்து வரும் செய்கைகளை நீதியோடும், நேர்மையோடும் நடவடிக்கை எடுத்து மக்களின் பாதுகாப்பிற்கு அதிகாரிகள் உதவ வேண்டுமென்று நான் கேட்டேன்.

அதிகாரியும், நகரில் அமைதியும், அரசியல் கண்யமும், கட்டுப்பாடும் நிலை பெற தன்னாலான முறையில் நீதியோடும், நேர்மையோடும் செய்கிறோம்! "உங்களுடைய ஒத்துழைப்பும் ஆதரவும் கொடுக்க வேண்டும்" என்று கூறினர்!

மேலும் நகரில் கூட்டங்கள் நடத்துவதற்காகவும், அரசியல் காரியங்கள் நடைபெறுவதற்கு நாம் ஒரு உடன்பாடு செய்து கொண்டால் நகரில் அமைதியான முறையில் காரியங்கள் செய்ய முடியுமென்று கூறி, சென்னை நகரிலுள்ள 100 டிவிஷன்களில், ஒரு டிவிஷனில் ஒரு கூட்டம் நடைபெற வேண்டும். போக்கு வரத்துக்குத் தடையேற்படாத இடங்களில் தான் கூட்டங்கள் நடத்த வேண்டும்! பொது இடங்களில் தான் கூட்டங்கள் நடத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார் இதை நானும் நண்பர்களும் சம்மதித்தோம் போலீஸ் அதிகாரியிடம் நாங்கள் ஒப்புக் கொண்டது. நகரசபை டிவிஷன்களை வைத்துத் தான் ஒப்புக் கொண்டோம்! கூட்டங்கள் மனுப்போடுவதிலும் ரிஜிஸ்டர் வைத்து தவறான காரியங்கள் நடக்காமல் இருப்பதற்கான வழிகளை வகுக்கவும் பல யோசனைகளை விவாதித்து முடிவிற்கு வந்தோம், ஆனால் ஒரு நாளைக்கு 100 டிவிஷன்களில், ஒரு டிவிஷனுக்கு ஒரு கூட்டம் என்று பேசினோம், இன்று நான் கேள்விப்படுகிறேன். போலீஸ் டிவிஷன் என்று அதிகாரிகள் கூறுவதாகக் கேள்விப்படுகிறேன் அந்த மாதிரி நாங்கள் பேசவில்லை.

இன்று நகரில் பொதுக் கூட்டங்கள் நடப்பதற்கான பொது இடங்கள் எங்கிருக்கிறது. அப்படி இருந்தாலும் அவைகளில் கூட்டங்கள் நடத்துவதற்கும் அனுமதி கொடுப்பதில்லை. ஜிம்கானா மைதானம், ஜலந்து மைதானம் நகர சபைக்கான பூங்காக்கள் இவைகளில் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதிப்பதில்லை. பின் எங்கு நடத்துவது!

நகரத்திலுள்ள பரந்த வீதிகளில் நடத்தினால் தான் பொது மக்கள் நாட்டில் நடைபெற்று வரும் நிலைமைகளை அறிந்து கொள்ள முடியும்! போக்கு வரத்துக்குத் தடையென்று கூறி கூட்டங்களுக்குத் தடை செய்தால் மக்களுக்கு அரசியல் விழிப்பு எப்படி ஏற்படும்!

கழுதைகளும், ஆடு மாடுகளும் மேய்கின்ற சில இடங்களில் கூட்டங்கள் நடத்த அனுமதிப்பதில்லை! அரசியல் காரணங்களைக் கூறி மோர் மார்கெட்டிற்குப் பக்கத்திலுள்ள பூங்காவிலும் மைதானத்திலும் கூட்டங்களுக்கு இடம் கொடுப்பதில்லை!

மோர் மார்க்கட் மைதானங்களில் தேவையற்ற பல காரியங்கள் செய்வதற்குப் பயன் படுகிறது! அப்படி இருக்கும் போது கூட்டங்களுக்கு ஏன் அனுமதிக்கக் கூடாது!

சுவரொட்டிகள் ஒட்டுவதற்கும் தடை விதித்து பொதுக் கூட்டங்கள் நடைபெறும் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு இடைஞ்சல் செய்யப்படுகிறது! இது சம்மந்தமாக எனக்குப் பல புகார்கள் வந்து கொண்டிருக்கிறது! இது மக்களின் உரிமைகளில் ஆட்சியினர் தலையிட்டு, அதை தடை போடுவது போலாகும்.

இந்த விஷயத்தில் ஆட்சியினர் ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டும்.

நானும் இது பற்றி வெகு விரைவில் முடிவெடுக்க நினைத்திருக்கிறேன்.

இந்த நிலை இப்படியே நீடித்தால் எங்கள் தோகளுக்கு ஒரு முடிவைத் தெரிவிக்கப் போகிறேன். அது இப்போதல்ல ஆட்சியாளர்களின் போக்கை மாற்ற முயற்சிப்போம்! அது பயன்தரா விட்டால் அந்த முடிவுக்கு வருவோம், அதுவும் அதிகாரிகளுக்கு அறிவித்து! விட்டுச் செய்வோம்!

சுவர்களில் கூட்ட விளம்பரத் தாள்கள் ஒட்ட முடியா விட்டால் கூட்டங்கள் நடத்துகின்ற மன்றங்களின் செயலாளர்களும், நிர்வாகிகளும் சுவரொட்டிகளை தட்டிகளில் ஒட்டி தெருக்களில் ஊர்வலமாக வந்து கூட்ட நிகழ்ச்சிகளை அறிவிப்பார்கள்!

அதற்குத் தடை விதித்தால் அந்த வட்டத்திலுள்ள நகர மன்ற உறுப்பினர் தட்டிகளைத் தூக்கி வந்து மக்களிடம் நிகழ்ச்சிகளைக் கூறுவார். அதற்கும் தடை வந்தால், மாலை கூட்டங்களில் பேசுகின்றவர்களை தட்டிகளைத் தூக்கி வந்து கூட்டத்தைப பற்றி அறிவித்து மாலையில் பேசுவார்கள். நான் இன்று மாலையில் ஒரு கூட்டத்தில் பேசுகிறேன் என்றால், காலையில் தெருக்களில் தட்டிகளைத் தூக்கி வந்து நிகழ்ச்சிகளை அறிவித்து விட்டு மாலையில் பேசுவேன். இந்த மாதிரி நிலை வந்தால் நிலமை என்னவாகும்;

இந்த நிலையை அதிகாரிகள் உண்டாக்கப் போகிறார்களா நான் மேற் சொன்னவை இப்பொழுதே செய்யும்படி கூறவில்லை.

நான் விரைவில் யோசித்து ஒரு முடிவுக்கு வந்து அறிவிப்பு அறிவித்தால் பின் அமுலாக்க வேண்டும்.

வளர்ந்து வருகின்ற மக்கள் உணர்ச்சியை இம்மாதிரியான தடை விதிப்பதால் தடைசெய்து விட முடியாது.

பண்டித நேருவோ, பாபு ராஜேந்திர பிரசாத்தோ இங்கு வந்தால் அவர்கள் ஒரு இடத்திற்குப் போவதாக இருந்தால் ஒரு மணி நேரத்திற்கு முன்பே அதாவது ஒரு மைல் தூரத்திற்கு வாகனாதிகளையும், மக்களையும் நிறுத்தி தொந்திரவு கொடுக்கிறார்கள். இதனால் எல்லாம் போக்கு வரத்துக்குத் தடை ஏற்பட வில்லையா?

போக்கு வரத்துக்குத் தடை ஏற்படாமல் இருப்பதற்கேற்றார் போல் பரப்பலான மைதானம் இருக்கிறதா?

கூட்டத்தில் பேசும் சொற்பொழிவுகளை மக்கள் கேட்பதற்காக வைக்கப்படும் குழாய்கள் இரண்டு தான் வைக்க வெண்டுமென்று கூறுகிறார்கள். இதை ஆட்சியினர் கடைப் பிடிப்பார்களா?

சமீபத்தில் இங்கு வரப் போகும், நேரு பேசும் கூட்டத்தில் இரண்டு குழாய்கள் தான் வைப்பார்களா? அதிகமாக வைக்க மாட்டார்களா?

ஒரு முறை நேரு இங்கு வந்த போது ஒலி பெருக்கி குழாயகளை அங்கணத்திற்கு அங்கணம் வைத்து நேரு சொற்பொழிவை மக்கள் கேட்கும் வண்ணம் செய்தார்களே. அவ்விதம் இப்போதும் செய்ய மாட்டார்களா என்பதைப் பார்ப்போம்.

நான் மீண்டும் போலீஸ் பெரிய அதிகாரியைப் பார்த்துப் பேசப் போகிறேன்.

(7ம் பக்கம் பார்க்க)

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,:
404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35. வாணியர் தெரு. சென்னை-14.